அதிசய மணல் மாதா

திருத்தல வரலாறு

ஓர் ஆராய்ச்சி நூல்

மாதாவின் அப்போஸ்தலர்கள்

தூத்துக்குடி

2003

அதிசய மணல் மாதா திருத்தல வரலாறு

[ஓர் ஆராய்ச்சி நூல்]

ஆசிரியர்

சுவாமி பங்கிராஸ் M. ராஜா

வெளியிடுவோர்

மாதாவின் அப்போஸ்தலர்கள்

<u>கிடைக்குமிடம்</u>

Fr. Pancras M. Raja

9/13 M. Sahayamathapattanam

T. MELUR P.O

THOOTHUKUDI - 628 002.

முதல் பதிப்பு - 2003

3000 Copies

நகல் உரிமை (Copy Right)

ஆசிரியரின் அனுமதியின்றி இந்நூலை முழுமையாகவோ இதன் ஒரு பகுதியையோ அச்சடிக்கவும் விற்பனை செய்யவும் யாருக்கும் உரிமை இல்லை. இந்நூலின் வார்த்தைகளை மாற்றவோ கூட்டவோ குறைக்கவோ ஆசிரியரின் முன் அனுமதியை எழுத்துமூலம் பெற வேண்டும்.

விலை : Rs. 15/-

IMPRIMATUR :

குறிப்பு

இது ஒரு புதிய ஆராய்ச்சி நூல் என்பதால் இதில் காணப்படும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை மேல் ஆராய்ச்சி செய்து சரியான உண்மையைக் கண்டு பிடிக்கவும் கைக் கொள்ளவும் வாசகர்களுக்கு முழு உரிமை உண்டு. ஆகவே இந்நூலுக்கு **"IMPRIMATUR", "NIHIL OBSTAT"** பெற வேண்டிய தில்லை

எம்மிடமிருந்து

இந்நூலை மொத்தமாகவோ சில்லறையாகவோ

வாங்கி விற்பனை செய்யவோ இனாமாக

வினியோகிக்கவோ செய்யலாம்.

பொருளடக்கம்

முன்னுரை 5

1. நாட்டு வளமும் அரசியல் பின்னணியும் 8

2. தென் தமிழ் நாட்டில் புனித தோமையாரின் வேதபோதகம் 13
   மணல் மாதா கோவிலில் புனித தோமையார் செய்த புதுமை 17

3. புனித தோமையார் கிறிஸ்தவர்கள் 18
   மாதா காட்சி 21
   வந். ஜியோவான்னி மரிஞ்ஞோலி ஆண்டகையவர்கள் 22
   கணக்கன் குடியிருப்பு பங்கு 23
   புனித பிரான்சிஸ் சவேரியாரின் வருகை 24
   மணல் மாதா கோவிலில் புனித சவேரியார் செய்த புதுமை 25

4. மணல் மாதா கோவில் மணலால் மூடப்பட்ட வரலாறு 27
   துறவிப் பாண்டியன் 27
   சேசுமரியாயி - மாதா காட்சி 28

5. செந்தோரி மணல்மேரி மாதா 34
   மாதா ஆலயம் வெளிப்பட்ட வரலாறு 35
   மாதா காட்சி 36
   ஆலயத்தில் கண்ட அதிசயம் 38

6. மணல் மாதா கோவில் மாபெரும் திருத்தலமாக மாண்புற்ற வரலாறு 40
   சங். ஜாண் மேஞ்செல்லா சுவாமி 40
   சங். இஞ்ஞாசியார் சுவாமி மணல் மாதா பக்தன் 41
   மணல் மாதா திருத்தலத்தின் பொற்காலம் உதயம் 42
   புதுமைக் குடிநீர் கிணறு 43
   கோவிலைச் சுற்றி பாதாளக் கோட்டை 44
   பக்தர்கள் உயிர் பிழைத்த புதுமை 45
   திருயாத்திரீகர் தங்கும் விடுதி 46
   பாத்திமா யாத்திரைக் கன்னிமாதா 46
   புதிய பொற்காலம் 48

7. மணல் மாதாவின் அற்புதங்கள் 50

ஆதார நூல்களின் பட்டியல்

1. பார்த்தசேனஸ் எழுதிய "தோமையார் நடபடிகள்" சான்று – 1912–ல் வெளியிடப்பட்ட The Catholic Encyclopaedia. vol XIV.

2. "India and the Apostle Thomas" by Dr. A.E. Medlicott (The Catholic Encyclopaedia).

3. "City of God" by Mary of Agreda. Vol. II + IV.

4. இந்திய நாட்டு அப்போஸ்தலராகிய புனித தோமையார் வரலாறு – by M.மோத்தா வாஸ் சுவாமியவர்கள்.

5. "In the Steps of St. Thomas". by Rt. Rev. Herman De Souza.

6. "A History of Christianity in India" by George Mark Moraes.

7. The Letters and Instructions of St. Francis Xavier - translated by M. Joseph Costelloe S.J.

8. "The Life of St. Francis Xavier" by Rev. Fr. F.W. Faber D.D.

9. History of the Catholic Church in Kanyakumari District. by Dr. V. Lawrence.

10. "தென் பாண்டி மண்டல மானவீர நாடு" by S. Alex Cruz Muthia.

11. "தமிழ்ச் சங்கங்களின் வரலாறு" ஆசிரியர் கோவை திருமந்திரமணி, துடிசைக்கிழார், அ. சிதம்பரனார்.

12. "தமிழர் அரசு" ஆசிரியர் திரு. ஏ.எம். தனிஸ்லாஸ் நாடார்.

13. தூத்துக்குடி மறைமாவட்டக் கையேடு பொன்விழா வெளியீடு.

14. சொக்கன்குடியிருப்பு, அதிசய மணல்மாதா கோவில் கண்டுபிடிக்கப்பட்ட 200–ம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர்.

15 "மணம் தரும் மணல் மாதா" by. Fr. John Bosco.

அதிசய மணல் மாதா திருத்தல வரலாறு

(ஓர் ஆராய்ச்சி நூல்)

முன்னுரை

உலக இரட்சகரும் நமதாண்டவருமான சேசு கிறிஸ்து நாதர் ஏற்படுத்திய சத்தியவேதத்தின் தெய்வீக ஒளியானது, அப்போஸ்தலரான புனித தோமையார் வழியாக முதன் முதல் தமிழ் நாட்டின் தென்பாண்டி மண்டலத்தில்தான் ஏற்றப்பட்டது என்ற உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தும் சாசனமாகத் திகழ்கின்றது அதிசய மணல் மாதா கோவில்.

கி.பி. 26-ம் ஆண்டிற்கும் 46-ம் ஆண்டிற்கும் இடையிலுள்ள 20 ஆண்டுகள் புனித தோமையார் தென்பாண்டி நாட்டில் தங்கி வேதம் போதித்துள்ளார். அப்போது தென்பாண்டி நாட்டை ஆண்டு வந்த அரசர் பெயர் "கஸ்பார்" என்னும் கந்தப்பர் ராஜா. அவரது தலைநகரம் நாட்டாற்றின் கோட்டை என்னும் "நாராங்கோட்டை".

தென் பாண்டி நாட்டின் கந்தப்பர் ராஜா (கஸ்பார்), வட இந்தியாவின் தக்ஷசீலம் உட்பட்ட பார்த்திய நாட்டின் கொண்டோபெர்னஸ் ராஜா (மெல்கியோர்), எடிஸ்ஸா பட்டணத்தைத் தலைநகராகக் கொண்ட மேதியா நாட்டின் அப்கார் ராஜா (பல்தசார்) ஆகிய மூன்று ராஜாக்களும் தேவசுதனாக்ப் பிறந்த சேசு குழந்தையைத் தரிசிக்க, ஒரு அதிசய நட்சத்திர வெளிச்சத்தால் வழி நடத்தப்பட்டு பெத்லகேம் குகை அடைந்து உலக இரட்சகரை தேவ - மனிதக் குழந்தையாக ஆராதித்து பொன், தூபம், வெள்ளைப் போளம் என்னும் காணிக்கைகளைச் செலுத்தினார்கள். இவர்களுக்கு கடவுளின் தாயாகிய கன்னி மாமரி வேத உபதேசம் செய்து ஆசி கூறி அனுப்பினார்கள்.

சேசு கிறிஸ்துநாதர் பரலோகத்திற்கு ஆரோகணமானபிறகு, அப்போஸ்தலர்கள் உலகின் பலநாடுகளுக்கும் அனுப்பப் பட்டபோது, புனித தோமையார் மேதியா, பார்த்தியா, இந்தியா என்னும் தேசங்களுக்குச் செல்லவும் அவரே மூன்று ராஜாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், புனித இராயப்பரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கி.பி 26-ம் ஆண்டில் தென்பாண்டி மண்டலத்தையும் அதோடு இணைந்திருந்த ஈழ தேசத்தையும் ஆண்டுவந்த கந்தப்பர் ராஜா தனது மந்திரியாகிய ஹாபான் என்னும் எபிரேயனை வணிக அலுவலுக்காக யூதேயா தேசத்திற்கு அனுப்பிய போது, அவன் புனித தோமையாரை சந்தித்தான். சேசுநாதரின் அதிசய தரிசனத்தால் ஏவப்பட்டு ஹாபான் புனித தோமையாரை நாராங்கோட்டைக்கு அழைத்து வந்தான். ஏற்கெனவே மேதியா நாட்டில் வேதம் போதித்து அங்கே அப்கார் அரசனை மனந்திருப்பிய புனித தோமையார், ஹாபானுடன் நாராங்கோட்டைக்குக் கப்பலேறி, முதலில் இந்திரப்பட்டணம் (இன்றைய கராச்சி) என்னும் பார்த்திய நாட்டுத் தலை நகரில் இறங்கினார். அங்கே கொண்டோபெர்னஸ் ராஜாவின் ஒரே மகளின் திருமண வைபவத்தில் தோமையார் அற்புதமாய் வேதம் போதித்து, அரசன் மனந்திரும்பவும் புது தம்பதியர்கள் கன்னிமை விரதம் பூண்டு துறவறம் எய்தவும் ஏவுதல் பெறச் செய்தார்.

உடனே அங்கிருந்து புறப்பட்டு உவரித் துறைமுகம் வழியாக நாராங்கோட்டை என்னும் பிற்கால மான வீரநாட்டின் தலைநகர் சேர்ந்து கந்தப்பர் ராஜாவின் முன் வந்து நின்றார். கந்தப்பர் ராஜா புனித தோமையாரின் தெய்வீகமான தோற்றத்தைக் கண்டு : புண்ணியரே! நான் உம்மை எனது நாட்டின் அந்தரங்க மந்திர ஆலோசனைத் தலைமை ஸ்தானத்தில் அமர்த்த விரும்புகிறேன். நீர் விரும்பினால் எனது அரசியல் ஆலோசகராகவும், தெய்வ வழிபாட்டுப் புரோகிதராகவும், சகலகலா வல்லுநராகவும் புலவராகவும் பதவி பெறலாம் என்க, புனிதர் அதற்கு இசைவு தெரிவித்தார்.

அதன்பின் அரசன் புனித தோமையாரிடம் தனது நெடுநாள் ஆசை ஒன்றைத் தெரிவித்தான். புண்ணியரே, எனது நாட்டிற்குக் கோட்டை அரண் உண்டு, படைத்தளம் உண்டு ஆனால் அரண்மனை இல்லை. எனவே நாராங்கோட்டையில் எனக்கொரு அழகிய அரசமாளிகை எழுப்ப வேண்டும், அதற்கு நீர் சொல்லும் ஆலோசனை என்ன? என்று கேட்டான். புனித தோமையார் அவனுக்கு மிகவும் தேவையாயுள்ள பரலோக மாளிகையை மனதில் நினைத்துக் கொண்டு தரையில் ஒரு பிரம் மாண்டமான மாளிகையின் மாதிரி வரைபடம் வரைந்து காட்டினார்.

அரசன் புனிதரின் ஓவியக்கலைத் திறனை வியந்து, ஓ அற்புதரே! நீர் வரைந்த மாதிரியின் படி நீரே இம்மாளிகையைக் கட்டுவீராக! என்று கூறி, அரச கஜனாவிலிருந்து புனிதர் கேட்கிற பணம் பொருள் அனைத்தையும் வழங்கும்படி ஏற்பாடு செய்தான். புனித தோமையார் அரசனுக்கு வியத்தகு அரண்மனை ஒன்றை ஆறு மாதத்தில் எழுப்புவதாக ஒப்புக் கொண்டார். எனவே தனது எல்லைக்குட்பட்ட ஈழநாடு சென்று யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு 6 மாதங்கள் அரச அலுவல்களைக் கவனித்துவிட்டு திரும்பி வருவது வரை, நாராங்கோட்டையின் ஆட்சியையும் அரண்மனை வேலையையும் புனிதரிடம் ஒப்படைத்துச் சென்றான். உடனே தம் அலுவலை ஆரம்பித்தார் புனித தோமையார். முதன் முதல் அவர் பரலோகமாதாவுக்கு ஓர் ஆலயம் கட்டி அங்கே மக்கள் கூடிவரும் படிச் செய்து அவர்களுக்கு வேத உபதேசம் செய்தார். அந்த முதல் ஆலயம் தான் "மணல்மாதா கோவில்" என இப்போது அழைக்கப்படும் கணக்கன்குடியிருப்பு பரிசுத்த பரலோக மாதா கோவில் என்பதை நிரூபிப்பதே இந்நூலின் நோக்கமாகும்.

இப்புதிய, ஆயினும் புராதீனப் பாரம்பரிய வரலாற்றுக் கண்ணோட்டத்தில், அதற்குரிய சான்று ஆதாரங்களுடன், பதினைந்து ஆண்டு கால எனது ஆராய்ச்சிக்குப் பின் எழுதப்பட்ட "அதிசய மணல் மாதா திருத்தல வரலாறு" என்னும் இச்சிற்றேடு, பரலோக மாதாவின் பக்தர்களுக்கும் மற்றோருக்கும் ஏராளமான பரலோக வரங்களையும் பரிசுத்த வாழ்வுக்குரிய நலன்களையும் வழங்குவதாக!

சுவாமி பங்கிராஸ் M. ராஜா,
ஆசிரியர்.

(இந்நூலில் கூறப்பட்டுள்ள புதிய ஆராய்ச்சிகளுக்கு உரிய சான்றுகளைப் புள்ளி விபரங்களுடன் அறிய வேண்டுமானால் இதே ஆசிரியர் எழுதி விரைவில் வெளிவரவுள்ள **"புனித தோமையாரின் முதல் இந்தியப் பயணம் கி.பி 27 முதல் 46 வரை"** *என்னும் நூலை வாசியுங்கள்)*

குறிப்பு : **நாம் பயன்படுத்துகிற காலண்டர் ஏற்படுத்தப்பட்டபோது ஆண்டுகளின் கணிப்பில் ஏற்பட்ட தவறினால், கி.பி 1-ஆம் ஆண்டு என்பது, கிறிஸ்து பிறந்த எட்டாவது ஆண்டு ஆகையால், கிறிஸ்து நாதர் தனது 33வது வயதில் இறந்த போது அது கி.பி 25-வது ஆண்டுதான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.**

1

நாட்டு வளமும் அரசியல் பின்னணியும்

கி.மு. 9564–ல் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தால் (கடல்கோள்) லெமூரியா எனும் குமரிக் கண்டம் முற்றிலுமாக அழிவுற்ற போது, அவ்வழிவிலிருந்து தப்பிப்பிழைத்த பண்டையத் தமிழர்களாகிய பாண்டியர்கள். கொற்கைத் துறைமுகத்தை அடுத்துள்ள வளமான பூமியில் வந்து குடியேறினார்கள்.

வருடம் முழுவதும் தண்ணீர் கரைபுரண்டோடும் இரண்டு ஆறுகளுக்குமத்தியில் இப்பாண்டிய நாடு உதயமானது. ஒன்று தாமிரபொருநை ஆறு; இன்னொன்று நாட்டாறு என்னும் நம்பி ஆறு. பொருநை ஆற்றின் முகத்துவாரத்தில் கொற்கை, காயல் என்னும் இரண்டு துறைமுகங்களும் நாட்டாற்றின் முகத்துவாரத்தில் உவரி, கூடுதாழை, பெரியதாழை என்னும் மூன்று துறை முகங்களும் இருந்தன. பாண்டியர்கள் பயிர் செய்து நெல், வாழை, தென்னை, பனை வளங்களால் செல்வச் செழிப்புடன் வாழ்ந்ததோடு, கடல் வளத்தால் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், சங்கு அறுத்து ஆபரணங்கள் செய்தல் ஆகிய தொழில்களிலும் முன்னேற்றம் கண்டார்கள்.

கி.மு. 7500–ல் முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன் கொற்கையில் அரசிருக்கை அமைத்து ஆட்சி செய்தான். கி.மு. 6805–ல் வெண்டேற்செழியன் என்னும் பாண்டிய மன்னன் பொருநை ஆற்றின் முகத்துவாரத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கபாட புரத்தில் இடைச்சங்கம் என்னும் இரண்டாவது தமிழ்ச் சங்கத்தை நிறுவினான்.

கபாடபுரத்தின் முத்துக்கள் வேறு இடங்களில் உள்ள முத்துக்களைவிட சிறந்ததாயிருந்த காரணத்தால் உரோமாபுரி, பாபிலோனியா, ஜெருசலேம், எகிப்து முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. அதனால் கொற்கையும் உவரியும் உலகப் புகழ் பெற்ற துறைமுகங்களாக விளங்கின. அங்கே வந்த அயல் நாட்டு வணிகர்கள் தங்கள் தேசங்களிலிருந்து ஏராளமான தங்கத்தைக் கொண்டு வந்து கொடுத்து இங்குள்ள முத்துக்களையும் ஆபரணங்களையும் கப்பல்களில் ஏற்றிச் சென்றார்கள். இவ்வணிகர்களில் ஒருவர் தான் (பார்த்தியாவிலிருந்து ஜெருசலேம் சென்று புனித இராயப்பரின் முதல் பிரசங்கத்தைக் கேட்டு

ஞானஸ்நானம் பெற்ற) ஹாபான் என்னும் பார்த்திய கிறிஸ்தவர். இவர் கந்தப்பர் ராஜாவின் உற்ற நண்பராகவும் பிறகு மந்திரியாகவும் ஆனார். இதற்குக் காரணம் கொற்கை, உவரித் துறை முகங்கள் வழியாக தென்பாண்டி நாட்டிற்கும் பாலஸ்தீனா தேசத்திற்கும் இடையே ஏற்பட்டிருந்த வணிக உறவேயாகும். தென்பாண்டி நாட்டிலுள்ள யானைத் தந்தங்கள், மயில்கள், வானரங்கள், முத்துப் பதித்த பொன் நகைகள் முதலியவைகள் உவரித் துறைமுகம் வழியாக ஜெருசலேமிலிருந்து சாலமோன் இராஜாவுக்குக் கொண்டு செல்லப் பட்ட வரலாற்று உண்மை, வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது (அரசராகமம் III. 9 : 28; 10 : 22).

கி.மு. 3155–ல் ஏற்பட்ட கடல் கோளினால் கபாடபுரமும், கி.மு. 3105–ல் ஏற்பட்டப் போரினால் தமிழ் இடைச் சங்கமும் அழிவுற்றன. கபாடபுரத்தில் அரசாண்ட கடைசி பாண்டிய மன்னன் முதலாம் முடத்திரு மாறன் ஆவான். அதன்பின் கி.மு. 1915–ல் மதுரையில் அதே தமிழ்ச்சங்கத்தை நிறுவிய பாண்டிய மன்னன் இரண்டாம் முடத்திருமாறன் ஆவான். மூன்றாம் முடத்திருமாறன் என்ற பாண்டிய மன்னன் கி.மு. 1715–ல் மதுரையில் கடைச் சங்கத்தை நிறுவினான்.

அதன் பின் கி.மு. 1715 முதல் கி.பி. 235 வரை மதுரையில் 49 பாண்டிய மன்னர்களும் தென்பாண்டி நாட்டில் பற்பல சிற்றரசர்களும் ஆண்டு வந்துள்ளனர். புனித தோமையாரின் முதல் இந்தியப் பயணத்தின் காலமாகிய கி.பி. 26 முதல் கி.பி. 46 வரையுள்ள 20 ஆண்டுகளில் மதுரையில் ஆண்டு வந்த பாண்டிய மன்னர்களில் ஒருவர் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்ற முதலாம் உக்கிரப் பெருவழுதி ஆவார். அதே சமயத்தில் தென்பாண்டி நாட்டை இரண்டு பாகங்களாகப் பிரித்து கந்தப்பர் ராஜா, காத்தியப்பர் ராஜா (காத்) ஆகிய சகோதரர்கள் ஆண்டுவந்தனர். கந்தப்பர் ராஜா ஆண்ட பகுதி தென்பாண்டி நாட்டின் நாராங்கோட்டை ஆகும்.

கி.பி. 46–ல் புனித தோமையார் ஜெருசலேம் சென்று சேசுவின் தாயாராகிய பரிசுத்த கன்னி மரியாயின் கல்லறையையும், மோட்சத்திற்கு ஆரோபணமான தேவமாதாவையும் தரிசித்து, மாதாவை வேண்டி அவர்களின் இடைக்கச்சையைப் பெற்று புதிய வல்லமை வரத்துடன் கி.பி. 52–ல் இரண்டாம் முறை இந்தியாவுக்கு வந்த போது முதலில் மலபார் என்னும் சேர நாட்டில் (கேரளம்) சென்று வேதம் போதித்தார். அவ்வமயம் பல முறை நாராங்கோட்டையிலும் அதன் சுற்றுப்புற நாடுகளிலும் உள்ள தமது முதல் கிறிஸ்தவர்களைச் சந்தித்து அவர்களை சத்திய வேதத்தில் ஸ்திரப்படுத்தி வந்தார்.

அதன்பின் சோழ நாட்டிலுள்ள திருமயிலை (மயிலாப்பூர்) சென்று அங்கே வேதம் போதித்து கி.பி. 72–ல் வேத சாட்சியாக மரணமடைந்தார்.

நாட்டின் ஊடே ஓடுகிற ஆறு என்பதால் நாட்டாறு என்று பெயர் பெற்ற இன்றைய நம்பி ஆறு, அணைக்கரைக்குத் தென்திசையில் இரண்டாகப் பிரிந்து பின்னர் மூன்று கிளைகளாக ஓடி கடலில் விழுந்தது. இந்தக் கிளைநதிகளுக்கு மத்தியில் அமைந்துள்ள வளமான பகுதியில் பெருவாரியாகவும் நாகரீகமாகவும் வாழ்ந்து வந்த தமிழர்களுக்குத் தான் புனித தோமையார் முதன்முதலில் ஞானஸ்நானம் கொடுத்தார். இதற்கான புராதீன தடயங்கள் பல உள்ளன. குறிப்பாக இப்போது உள்ள இரம்மதுபுரம், அழிந்து பட்டுள்ள "யேசுபுரம்" மற்றும் சுற்றுப்புறங்களில் மக்கள் குடியிருப்பு இல்லங்களின் அஸ்திவாரங்களும், அரண்மனைக் கோட்டை கொத்தளங்கள் இருந்ததன் அஸ்திவாரக் கட்டுமானங்களும் பூமிக்கடியில் உள்ளன. இப்பகுதியில் பின்னால் இஸ்லாமியர்களால் இசலாபுரம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள "யேசுபுரம்" தான் கந்தப்பர் ராஜா ஞானஸ்நானம் பெற்ற பிறகு நாராங்கோட்டையின் தலைநகராயிருந்தது. இந்நாடு மானவீரநாடு எனவும் பின்னர் பாமர மக்களின் பேச்சுவழக்கில் மாநாட்சியா நாடு எனவும் வழங்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட நாட்டு வளமும் அரசியல் பின்னணியும் தென்பாண்டி நாட்டின் ஒருபாகமாகிய நாராங்கோட்டையின் தோற்றம், நிலவளம், தொழில் வளர்ச்சி மற்றும் கி.பி. முதல் நூற்றாண்டில் நிலவிவந்த அரசியல் நிலவரம் ஆகியவற்றை நன்கு உணர்த்துகின்றன.

இனி கி.பி. முதல் நூற்றாண்டில் கணக்கன் குடியிருப்பு அதன் சுற்றுப்புறச் சூழ்நிலையில் எப்படி சிறந்து விளங்கியது என்பதை நாம் அழகுற கீழ்க் காணுமாறு விவரிப்போம்.

வடபுறம் பரந்து விரிந்த நீர்த்தேக்கமாகிய தருவை ஏரி! அதைச் சுற்றிலும் வானளாவ உயர்ந்து பரந்த மரங்களடங்கிய பசுஞ்சோலை! தென்புறம் நாட்டாற்றின் கிளைநதி பாயும் சமவெளி! தருவை ஏரிக்கும் நாட்டாற்றிற்குமிடையே அமைந்துள்ள வளமிகு நிலப்பரப்பில் அடர்த்தியாக உயர்ந்து பரந்து காணப்படும் மரக் கூட்டம்! ஆண்டு முழுவதும் தண்ணீர் நிரம்பி வழிந்ததால் தருவை ஏரியில் பலவித மீன்கள் பலுகிப் பெருகி நிறைந்திருந்தன. மீன் உணவு நிரந்தரமாகக்

கிடைத்த காரணத்தால் உலகப் பிரசித்தி பெற்ற பலவித நாரை இனப் பறவைகள் இங்கு வந்து குழுமி ஒரு மாபெரும் பறவைச் சரணாலயத்தை உருவாக்கி யிருந்தன. இப்படி இது ஒரு நாரையின் கோட்டையாக விளங்கியதும் இந்நாடு "நாராங்கோட்டை" எனப்பெயர் பெற ஒரு காரணமாகும். இங்கு புனித தோமையார் கட்டிய பரலோகமாதா கோவிலைச் சுற்றிவந்து குடியமர்ந்த மக்களால் உருவான ஊரின் முதல் பெயரும் "நாரையூர்" என வழங்கப்பட்டு பின்னர் "நாரை" என்றும் அழைக்கப்பட்டது.

இந்த நாரையூரில் கட்டப்பட்ட பரலோக மாதா கோவில் மணலால் மூடப்பட்டு, 150 ஆண்டுகளுக்குப் பின் அதிசயமாகக் கண்டெடுக்கப்பட்ட பிறகுதான் மணல் மாதா கோவில் என்று அழைக்கப்பட்டது.. முதலில் இங்கே மணலோ மணல் தேரிகளோ இல்லாதிருந்தன. கோவிலுக்குத் தெற்கேயுள்ள வயல் வெளியில் நாட்டாற்றின் ஒரு கிளை நதி பாய்ந்தோடி தற்போது பெரியதாழை ஊர் இருக்கும் இடத்தில் சென்று கடலில் பாய்ந்தது. இந்நதியின் இரு ஓரங்களிலும் அடர்த்தியாக பெரிய பெரிய தாழைமரக் கூட்டம்; அதையடுத்து அகன்ற நெல்வயல் வெளி; ஆங்காங்கே சிறிய அல்லது பெரிய கூட்டமாக வளர்ந்து நிற்கும் தென்னை, பனை மரங்கள்; மா, பலா, வாழை ஆகிய முக்கனி பழமரங்களடர்ந்த பழமுதிர்ச் சோலைகள்; அவைகளுக்கிடையே வளைந்து ஓடும் நீரோடைகள்.

நாட்டாற்றின் இன்னொரு கிளை நதி பாய்ந்தோடி இப்போது கூடுதாழை ஊர் இருக்கும் இடத்தில் கடலோடு சேர்ந்தது. இங்கே தாழை மரங்கள் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டதால் இவ்வூர் கூடுதாழை எனப்பட்டது.

இவ்விரண்டு துறைமுகங்களிலிருந்து வியாபாரத்திற்காகவும் சுற்றுலாப் பயணமாகவும் கடல் வழியாக படகுகள் மூலம் நாரைகள் சரணாலயத்திற்கு பல வெளிநாட்டு, உள்நாட்டு மக்கள் வருவதும் போவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நாட்டாற்றின் மூன்றாவது கிளை நதியானது (இதுவே பெரிய நதி) ஒப்பீர் என்னும் உவரித் துறை முகத்தில் கடலில் பாய்ந்தது. வியாபாரக் கப்பல்கள் நதியின் வழியாக உள்நாட்டிற்குள் வந்து போகும் அளவுக்கு இந்நதி ஆழமாகவும் அகலமாகவும் இருந்தது. நதியின் இருமருங்கிலும் தென்னை மரங்கள் சூழ்ந்த தோப்புகளின் மத்தியில், தங்கத்தில் முத்துப்பதித்த விலை உயர்ந்த ஆபரணங்க ளும், கடல் சங்கின் பழிங்கு வடிவமைப்புகளாய்ச் செதுக்கப்பட்ட அழகிய பலவர்ண

மாலைகளும் வளையல்களும் உற்பத்தி செய்யப்படுகிற குடிசைத் தொழிற்சாலைகளும் விற்பனை நிலையங்களும் இருந்தன.

எகிப்து நாட்டு கிளேயோபத்ரா இளவரசிக்கு முத்துமாலைகளும் அவளது வீரர்களுக்கு அரிசியும் உவரி, கொற்கை ஆகிய துறைமுகங்களிலிருந்து கொண்டு செல்லப்பட்டனவென்றால், இத்தனைக்கும் காரணம் அக்காலத்தில் நாட்டாற்று வெள்ளம் வருடம் முழுவதும் கரை புரண்டோடும் அளவுக்கு மேற்குத் தொடர்ச்சிமலையின் நம்பி ஊற்றிலிருந்து தண்ணீர் அளவில்லாமல் சுரந்து பாய்ந்து ஓடியதாலும் அத்துடன் மாதம் மும்மாரி மழை பொழிந்து வந்ததாலுமேயாகும்.

நாட்டாற்றின் கரையில் அமைந்திருப்பதாலும், நாரையின் கோட்டை இங்கே இருப்பதாலும் மற்றும் நாடாண்ட மன்னர்களின் (நாடு + ஆண்) கோட்டையாக தொன்று தொட்டு வழங்கி வந்தகாரணத்தாலும் இந்த நாடு "நாட்டாற்றின் கோட்டை", "நாரையின் கோட்டை", "நாடாண் கோட்டை' என விளங்கும் "நாராங்கோட்டை" ஆனது. இந்நாராங் கோட்டையில் கந்தப்பர் ராஜாவின் அரசு இருக்கையானது இப்போதுள்ள அணைக்கரை ஊருக்குக்குத் தென் கிழக்கிலுள்ள யேசுபுரத்தில் அமைந்திருந்தாலும், புனித தோமையாரை அதிகமாகக் கவர்ந்தது "நாரை" ஊரேயாகும். ஏனெனில் அமைதியோடும் பக்தியோடும் மக்கள் ஒன்று கூடி வேதபோதனை கேட்க மிகவும் உசிதமாகவுள்ளது நாரை ஊரும் அதன் சுற்றுப்புறமுமே என்பதால், "புனித தோமையார் கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்படும் முதல் உரோமன் கத்தோலிக்கக் குழுவினை இந்தியாவில் ஸ்தாபிக்கும் முதல் இடமாக தென் பாண்டி நாட்டின் நாரையூர் பரலோக மாதா கோவிலை அவர் தேர்ந்தெடுத்தார்.

இப்படி இந்தியாவில் சேசு கிறிஸ்துநாதருடைய சந்திய வேதம் முதல் முதல் காலூன்றிய இடம் பிரபலியமாக அறியப்படும் படியாகவே, அப்போஸ்தலரான புனித தோமையார் முதன் முதலில் தேவமாதாவுக்கு ஆலயம் எழுப்பிய "நாரை" ஊரில் தலை முறை தலை முறையாக இடைவெளியின்றி இன்றுவரை கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வரவும், அதே இடத்தில் பற்பல தடவைகளில் அழிவுற்று, மீண்டும் கட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்ட பரிசுத்த பரலோக மாதா கோவில் இறுதியில் மணலால் மூடப்படவும் 150 ஆண்டுகளுக்குப் பின்பு அற்புதமாகக் கண்டெடுக்கப்பட்டு பெரிய திருத்தலமாக விளங்கும்படியாகவும் புதுமை செய்ய ஆண்டவர் திருவுளமானார்.

2

தென் தமிழ் நாட்டில் புனித தோமையாரின் வேதபோதகம்

கி.பி. 27–ம் ஆண்டில் நாராங்கோட்டை வந்தடைந்த புனித தோமையார் மூன்று ராஜாக்களில் இருவரான, கஸ்பார், மெஸ்கியோர் ஆகியோருக்கு "நாரை"யிலுள்ள (மணல்) மாதா கோவிலில் ஞானஸ்நானம் கொடுத்த சுவைமிக்க நிகழ்ச்சிகளை இங்கு விளக்கிக் காட்டுவோம்.

இந்நூலின் முன்னுரையில் கூறியபடி புனித தோமையார் நாராங்கோட்டையில் கந்தப்பர் ராஜாவுக்கு ஓர் அழகிய அரசமாளிகை கட்டுவதாக வாக்களித்தார். அதைக் கட்டி முடிக்க எவ்வளவு நாட்கள் ஆகும் என்று அரசன் கேட்டபோது, ஆறு மாதங்கள் அதாவது அவ்வாண்டின் அக்டோபர் (தெஷ்ரி) மாதத்திலிருந்து அடுத்த வருடம் ஏப்ரல் (நிஸான்) வரை ஆகும் என்று புனித தோமையார் கூறினார். அரசன் அந்த ஆறு மாதங்களும் ஈழநாடு சென்று அங்குள்ள தமது மக்களைக் கண்காணித்து வரத் தீர்மானித்தான்.

அந்த ஆறு மாத காலமும் புனித தோமையார் அரண்மனை கட்டுவதற்குப் பதிலாக அரசாங்கப் பணத்தைக் கொண்டு முதலில் "நாரை" ஊரில் பரலோக மாதாவுக்கு ஒரு கோவில் கட்டினார். அங்கே கூடி வரும் மக்களுக்கு வேதபோதகம் செய்து ஞானஸ்நானம் கொடுத்தார். ஏழைகளுக்குத் தாராளமாக தர்மம் கொடுத்தார்.

பரலோக மாதா கோவிலில் தினமும் பலிபூசை ஒப்புக் கொடுத்து, இரவும் பகலும் நெடுநேரம் ஜெப தியானங்களில் செலவிட்டார். சுற்றுப்புற நாடுகளுக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார். அநேக இடங்களில் குருசடிகளும் சிற்றாலயங்களும் கட்டினார். வழிபாடு நடத்த ஆங்காங்கு உபதேசிமார்களும் குருக்களும் நியமிக்கப்பட்டார்கள்.

அந்நாட்களில் ஏற்கனவே இந்திரப் பட்டணத்தில் தோமையார் மூலம் ஞான ஒளி பெற்றிருந்த கொண்டோபெர்னஸ் என்னும் மெல்கியோர் ராஜா புனித தோமையாரை நேரில் சந்தித்து ஞானஸ்நானம் பெறுவதற்காக கராச்சி

துறைமுகத்திலிருந்து கப்பலேறி தென்பாண்டி நாட்டிற்கு வந்து சேர்ந்தார். அவர் தம்முடன் தனது மகளையும் மருமகனையும் அழைத்து வந்திருந்தார். இவ்விருவரும் தங்கள் திருமண வைபவத்தின்போது புனித தோமையாரின் அருளுரை கேட்டு ஞானஸ்நானம் பெறவும், மணத்துறவு பூணவும் தேவ ஏவுதலால் தூண்டப்பட்டவர்கள். ஆகவே தோமையாரைக் கண்டதும் அவர் பாதத்தில் மண்டியிட்டு கூறியதாவது; "சர்வேசுரனுக்கு உகந்த புண்ணியரே, நாங்கள் சேசுகிறீஸ்து நாதரில் முழு பற்றுதல் கொண்டுள்ளோம். எங்களை சத்திய வேதத்தில் சேர்த்தருள்வீராக" என்று கேட்டு நின்றார்கள். சில நாட்கள் அவர்கள் வேதசத்தியங்களைக் கற்றுக் கொண்ட பின் புனித தோமையார் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, கொண்டோபெர்னஸ் அரசனுக்கு **சாந்திபுஸ்** (சாபோர்) என்றும், அரசனின் மகளுக்கு **பெலாஜியா** எனவும் மருமகனுக்கு **டெனிஸ்** எனவும் பெயர் சூட்டினார். இந்திரப் பட்டணத்து அரசர் அச்சணமே தனது அரசை முற்றும் துறந்து அப்போஸ்தலருடன் தேவ ஊழியம் புரிய தன்னையே அர்ப்பணித்தார். புனித தோமையார் அவருக்கு தியாக்கோன் பட்டம் கொடுத்து தம்முடன் வைத்துக் கொண்டார். டெனிசை இந்திரப்பட்டணத்து மேற்றிராணி யாராக அபிஷேகம் செய்து தக்ஷசீலத்தில் சத்திய வேதத்தைப் பரப்ப அனுப்பி வைத்தார். பெலாஜியா டெனிசுடன் இந்திரப்பட்டணம் சென்று தன்னைக் கடவுளுக்கு அர்ப்பணித்து துறவறம் பூண்டாள்.

ஈழ நாடு சென்றிருந்த கந்தப்பர் (கஸ்பார்) ராஜா நாராங்கோட்டை திரும்பியதும் புனித தோமையாரிடம் அரச மாளிகை என்ன ஆயிற்று? என்று கேட்டார். புனித தோமையார் : "அரசே, மாளிகை கட்டியாகிவிட்டது, ஆனால் அது இவ்வுலகில் அல்ல, பரலோகத்தில் இருக்கின்றது. அங்கு நீர் போய் சேர்ந்த பிறகுதான் அதைப் பார்த்து ஆச்சரியப்படுவீர்" என சாந்தமுடன் பதில் கூறினார். அரசன் தான் ஏமாற்றப்பட்டதாக எண்ணிச் சினந்து அப்போஸ்தலரையும் ஹாபானையும் சிறையில் அடைத்தார்.

அடுத்த நாள் அரசனின் இளைய சகோதரன் காத்தியப்பர் ராஜா இறந்து விட்டார். அவரது சடலத்தை அடக்கம் செய்ய ஊர்வலமாய்க் கொண்டு சென்ற போது காத்தியப்பர் எழுந்து உட்கார்ந்தபடி : "என் சகோதரரை அழைத்துவாருங்கள்" என்றார். அரசன் அருகில் வர, காத்தியப்பர் : "அண்ணா நான் இறந்தவுடன் என்னை உயர்ந்த ஓரிடத்திற்குக் கொண்டு போனார்கள்.

அங்கே சொல்லற்கரிய அழகுடன் விளங்கிய ஒரு மாளிகையைக் கண்டேன். இது தோமையார் உன் சகோதரனுக்காக கட்டிய அரண்மனை. உனக்கு இது வேண்டுமானால் நீ உலகத்திலே சென்று உன் செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்கு தர்மம் செய்து இதை வாங்கிக் கொள்ளலாம் என வானதூதர்கள் சொன்னார்கள்'' என்றார்.

உடனே கந்தப்பர் ராஜா அப்போஸ்தலரை விடுதலை செய்து, அவர் பாதத்திலே விழுந்து : ''கடவுளுக்கு உகந்த புனிதரே, நீர் எனக்காக மோட்சத்தில் கட்டிய மாளிகையை நான் உரிமையாக்கிக் கொள்ளும்படி ஆண்டவராகிய சேசுகிறிஸ்து நாதரில் விசுவாசம் கொள்கிறேன். இனிமேல் அவருடைய உண்மையான ஊழியனாய்ச் சேவை செய்யும் படி எனக்கு உதவி செய்தருளும்'' என்றார்.

புனித தோமையார் அவ்விரு சகோதரர்களுக்கும் ஏழுநாட்கள் வேத சத்தியங்களைக் கற்பித்த பின் மணல் மாதா கோவிலில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். கந்தப்பர் ராஜாவுக்கு இராயப்பர் என்றும் காத்தியப்பர் ராஜாவுக்கு சின்னப்பர் என்றும் பெயரிட்டார். அப்படியே அரச அவையைச் சார்ந்தவர்கள் அனைவரும் பெருந்திரளான ஜனங்களோடு கிறிஸ்தவர்களாகி ஞானஸ்நானம் பெற்றார்கள்.

கந்தப்பர் ராஜா கிறிஸ்தவ மதத்தின் சத்தியங்கள், தத்துவங்கள், வாழ்க்கை நெறிகளைத் தெளிவாய் அறியவும் பரப்பவும் விரும்பினார். எனவே அவரது வேண்டுகோளின்படி புனித தோமையார் தமது புலமையையும் தெய்வ அருளையும் பயன்படுத்தி மணல்மாதா கோவிலில் அமர்ந்து. ''சத்திய மறையின் தத்துவங்களை'' ஏட்டுச்சுவடிகளில் எழுதிக் கொடுத்தார்.

இதன்பின் புனித தோமையார் தீவிரமாக வேதபோதக அலுவலில் ஈடுபட்டதுடன், கந்தப்பர் ராஜாவின் அரச அவையின் அந்தரங்க மந்திர ஆலோசனை கர்த்தாவாகவும் ஆரிய அகத்தியப் புரோகிதராகவும் அரசவைப் புலவராகவும் விளங்கி வந்தார்.

இவ்வாறு புனித தோமையார், ''பெருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது . . . பாண்டியர் திருக்குலம்'' என்று வேள்விக்குடி – சின்னமனூர்ச் செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு உரியவராயிருக்கிறார். (காண். சிதம்பரனார் எழுதிய ''தமிழ்ச் சங்கங்களின் வரலாறு'' பக். 99).

அக்காலத்தில் மானவீர நாட்டில் (நாராங்கோட்டை) தயாரிக்கப்பட்ட முத்துமாலைகள் விளை பொருட்கள், கருப்புக் கட்டி, கருவாடு போன்ற பொருட்களை பொதி மிருகங்கள், மாட்டு வண்டிகளில் ஏற்றி சேர நாட்டிற்குச் சென்று வியாபாரம் செய்தவர்களுக்காக ஒரு சாலை உருவாக்கப்பட்டிருந்தது. இந்த சாலையானது தென்பாண்டி நாட்டையும் தென் திருவிதாங்கூரையும் இணைப்பதாக அமைந்திருந்தது. பெரியதாழை, கூடுதாழை, உவரி துறைமுகங்களிலிருந்து புறப்படும் இச்சாலையானது நாரையூர், இரம்மதுபுரம், சங்கனாபுரம், இராதாபுரம். வடக்கன்குளம், மண்பொத்தை (காவல் கிணறு) பழவூர், நிலப்பாறை, இடைமலைத் தொண்டு, நரித் தொண்டு வழியாக இராம நாதிச்சன்புதூர், மருங்கூர் மற்றும் கோட்டார் வழியாக திருவிதாங்கோடு சென்றடைந்தது. நவல் மரச் சோலைகள், நாளிக்கிணறுகள், பயணிகள் தங்கும் கற்றூண் சத்திரங்கள் வழி நெடுக அமைக்கப்பட்டிருந்தன.

புனித தோமையார் பலமுறை இந்த சாலை வழியாகப் பயணம் செய்து நாராங்கோட்டைக்கு வெளியே கிழக்கில் உள்ள பழையகாயல் (சேசுகோவில்) புன்னைக்காயல், வீரபாண்டியன்பட்டணம், மணப்பாடு, பெரியதாழை, உவரி – மற்றும் மேற்கில் உள்ள வடக்கன் குளம், நிலப்பாறை, மருங்கூர், கோவளம், கன்னியாகுமரி, குமரிமுட்டம், கோட்டார், காரங்காடு, திருவிதாங்கோடு ஆகிய இடங்களில் ஆதி கிறிஸ்தவர்களை உருவாக்கி கோவில்கள், குருசடிகள் கட்டி உபதேசிமார்கள் குருக்களை ஏற்படுத்தினார். இவ்வாறு புனித தோமையார் கேரளாவில் உள்ள மேற்குக் கடற்கரையில் வேதம் போதிக்க செல்வதற்கு முன்னதாகவே (கி.பி. 52) இருபது ஆண்டுகள் (கி.பி. 27 முதல் 46 வரை) தென்தமிழ் நாட்டின் கிழக்குக் கடற்கரை ஊர்களிலும், உள்நாட்டு ஊர்களிலும் வேத போதகம் செய்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அப்போஸ்தலர் முதன்முதலில் கட்டிய கோவில்கள் குருசடிகள் எல்லாம் சேசுநாதர் பெயராலும் தேவமாதா பெயராலுமே கட்டப்பட்டன. ஏனெனில் அப்போஸ்தலர்கள் காலத்தில் புனிதர்களுக்கு வணக்கம் தொடங்கப்படவில்லை. குருசடிகளில் சிலுவைகள் இரட்டைச் சிலுவைகளாகவே இருந்தன. ஏனெனில் சேசுநாதர் சுவாமியின் சிலுவை இரட்டைச் சிலுவையாக இருந்ததை அப்போஸ்தலர்கள் நேரில் பார்த்தவர்கள். அதாவது கரங்களை அறைவதற்காக ஒரு குறுக்குச் சட்டமும், அதற்கு மேல் சிலுவையின் உச்சியில் INRI என்ற தீர்ப்பு

வசனம் தாங்கிய ஒரு குறுக்குச் சட்டமும் பொருத்தப்பட்டிருந்தது. புனித தோமையார் கிறிஸ்தவர்களும் அவரது சந்ததியாரும் இந்த இரட்டைச் சிலுவையையே பயன்படுத்திவந்தார்கள்.

பிற்காலங்களில் தோமையார் கட்டிய குருசடிகள், கோவில்கள் இருந்த இடங்களில் தோமையார் கோவில்கள் கட்டப்பட்டன. குமரி முட்டத்தில் புனித தோமையார் கட்டிய இரட்டைச் சிலுவை உள்ள குருசடியை இன்றும் காணலாம். அங்கு ஓர் அழகிய தோமையார் கோவில் கட்டப்பட்டுள்ளது.

மணல் மாதா கோவிலில் புனித தோமையார் செய்த புதுமை

ஒருநாள் புனித தோமையார் மணல் மாதா கோவிலில் பலமணி நேரம் ஜெபித்துவிட்டு வெளியே வருகையில் ஒரு பெண் அவர்முன்னால் தரையில் விழுந்து புரண்டு அலறினாள். அவளிடமிருந்த பேயானது : "சேசு கிறிஸ்து நாதருடைய அப்போஸ்தலரே! எங்களை ஏன் வதைக்கிறீர்? இப்போது எங்களை விரட்டி அடிக்க வந்தீரோ?" என ஓலமிட்டது. "நீங்கள் எத்தனை பேர்?" என வினவினார் புனிதர். "ஐநூறு பேர்" என்றது பேய். "சாத்தானே! ஆண்டவராகிய சேசு கிறிஸ்து நாதரின் பெயரால் உனக்குக் கட்டளையிடுகிறேன். இவளை விட்டு அகன்று போ!" என்று அதட்டி சிலுவை வரைந்தார் புனிதர். அதைக் கேட்ட பசாசு "போகிறேன், போகிறேன் . . . ஆனால் வெகுதூரத்தில் இவளைவிட உயர்ந்த அந்தஸ்தில் உள்ள வேறொரு பெண்ணைப் பற்றிக் கொள்வேன். அங்கே உம்மைச் சந்திக்கிறேன்" என்று கூறிக் கொண்டே ஓட்டம் பிடித்தது. உடனே அப்பெண் அமைதியாக எழுந்துநின்றாள். புனித தோமையார் அவளை ஆசீர்வதித்து, "பரிசுத்த கன்னிமரியாயின் கிருபை உனக்கும் உனது சந்ததிக்கும் எப்போதும் இருக்கட்டும்," என்று தீர்க்கத்தரிசனம் உரைத்தார்.

உடனே அவ்விடத்தில் வழிந்தோடிய ஓர் அற்புத நீரூற்றை ஆசீர்வதித்து அவளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து 'மரிய கிருபை' எனப் பெயரிட்டார். நாரை ஊரில் புனித தோமையார் செய்த இப்புதுமைச் சம்பவம் சங். M. மோத்தா வாஸ் சுவாமியவர்கள் எழுதிய "புனித தோமையார் வரலாறு" என்னும் புத்தகத்தில் 7–ம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

3

புனித தோமையார் கிறிஸ்தவர்கள்

கி.பி. 72–ம் ஆண்டில் புனித தோமையார் மைலாப்பூரில் வேத சாட்சியாக மரணமடைந்தார். அன்று முதல் கி.பி. 1542–ல் புனித பிரான்சிஸ் சவேரியாரின் இந்திய வருகை வரை நாராங்கோட்டை என்னும் மானவீரநாட்டில் புனித தோமையார் ஏற்றிய ஞான ஒளி எப்படி அணையாமல் காப்பாற்றப்பட்டது என இங்கு காண்போம்.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரை மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதியில் புனித தோமையாரின் ஞான மக்கள் என உரிமை பாராட்டுகிற புராதீன கிறிஸ்தவர்களின் குழுக்களே "புனித தோமையார் கிறிஸ்தவர்கள்" ஆவர்.

புனித தோமையார் எழுப்பிய (மணல்) மாதா கோவிலும் அதைச் சுற்றிலும் வாழ்ந்து வந்த ஆதிகிறிஸ்தவர்களும் கந்தப்பர் ராஜாவின் மரணத்திற்குப்பின் அவருடைய சந்ததியினரால் பராமரிக்கப்பட்டனர்.

நாராங்கோட்டை மானவீர நாடு என அழைக்கப்பட்டது. நாட்டின் விளைபொருட்களை சேமித்து வைக்க நாரை ஊரில் ஒரு பண்டக சாலை அமைக்கப்பட்டதால் அவ்வூர் 'பண்டகசாலை' (Pandacal) என அழைக்கப்பட்டது. அவ்வூரில் வாழ்ந்த "புனித தோமையார் கிறிஸ்தவர்கள்" இதர ஜனங்களைவிட நேர்மையும் தெய்வ பக்தியும் உள்ளவர்களாய்த் திகழ்ந்ததால் நாட்டின் வரவு செலவுகளைக் கண்காணித்துக் கணக்கெழுதும் "கணக்கர்கள்" இவ்வூரில் உள்ள கணக்காயத்தில் அதிகாரிகளாய் நியமிக்கப்பட்டார்கள். இக்காரணத்தால் நாரையூர் "கணக்கன்குடியிருப்பு" எனவும் பெயர் பெற்றது. மதுரையில் பாண்டிய மன்னனிடம் கணக்காயனாராகப் பணிபுரிந்தவர் இவ்வூரில் பிறந்து வளர்ந்த நக்கீரரின் தகப்பனே ஆவார்.

கி.பி 144 முதல் கி.பி. 174 வரை மதுரையை ஆண்டுவந்த வெற்றிவேற் செழியன் என்னும் நன்மாறன் காலத்தில் தென்பாண்டி நாட்டின் மானவீர நாட்டை ஆண்டு வந்த அரசர் கந்தப்பர் ராஜாவின் சந்ததியில் தோன்றிய நன்மாறன் என்னும் கிறிஸ்தவ அரசராவார்.

கி.பி. 174 முதல் 204 வரை பாண்டி நாட்டை ஆண்டு வந்த இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன் காலத்தில் புனித தோமையார் ஏற்றிய விசுவாச ஒளியானது பாண்டிய நாடெங்கும் பரந்துவளர்ந்து சோழநாட்டிலும் சேர நாட்டிலும் பரவி விரிந்தது. மானவீர நாட்டு வியாபாரப் பயணிகள் தெற்கே கன்னியாகுமரி வரையிலும் மேற்கே மார்த்தாண்டம் வரையிலும் வடக்கே மயிலாப்பூர் வரையிலும் சென்று ஆங்காங்கே கிறிஸ்தவ குடியிருப்புக்களை உருவாக்கினார்கள். குறிப்பாக காவிரி நதி கடலில் சேருமிடத்தில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பெரிய குழுவினர் தோமையார் கிறிஸ்தவர்களாய் விளங்கினர்.

கி.பி. 235 முதல் கி.பி. 340 வரை பாண்டிய நாடு களப்பிரர் என்னும் வடுகக் கருநடர்கள் (கன்னடர்கள்) படை எடுப்பினால் நிலை குலைந்தது. தோமையார் கிறிஸ்தவர்கள் தங்கள் வேதத்தைக் கைவிட்டுவிடும்படி வற்புறுத்தப்பட்டார்கள். உதாரணமாக கி.பி. 293 –ல் கிழக்குக் கடற்கரையிலுள்ள கிறிஸ்தவர்கள் வேதத்தை விட்டுவிடுவதற்குப்பதிலாக, காவிரிப்பூம்பட்டிணத் திலிருந்து கடல்வழியாக கேரளாவிலுள்ள கொல்லத்திற்குச் சென்று அங்குள்ள தோமையார் கிறிஸ்தவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். இப்படி வந்தவர்கள் 72 குடும்பங்கள் ஆகும்.

ஆனால் மானவீர நாட்டில் மட்டும் தொடர்ந்து கிறிஸ்தவ மன்னர்களே ஆண்டு வந்தனர். இச்சமயத்தில் மேதியா நாட்டின் எடிஸ்ஸா நகரில் தோமையார் முதலில் ஞானஸ்நானம் கொடுத்த அப்கார் ராஜாவின் (பல்தசார்) சந்ததியில் வந்த மேற்றிராணிமார்களின் கண்காணிப்பில்தான் இந்திய கிறிஸ்தவர்கள் வேத வழிபாடுகளை நடத்தி வந்தனர். மயிலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்ட புனித தோமையாரின் சரீரம் எடிஸ்ஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு வேத விரோதிகளிடமிருந்து பாதுகாக்கப்பட்டது.

தென் பாண்டி நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களும் கேரள நாட்டு கிறிஸ்தவர்களும் "மலபார் கிறிஸ்தவர்கள்" என்றே அழைக்கப்பட்டனர். இவர்களது வேண்டுகோளின்படி கி.பி. 345–ல் பாரசீகத்திலிருந்து கானா தாமஸ் என்பவரின் பொறுப்பில் மார்ஜோசப் என்ற மேற்றிராணியாண்டகையும் பாரசீக கிறிதவர்களின் ஒரு குழுவினரும் இந்தியாவுக்கு வந்து மலபாரில் குடியமர்ந்து தோமையார் கிறிஸ்தவர்களுக்கு உதவியும் ஊக்கமும் கொடுத்தார்கள்.

கி.பி. 354–ல் உரோமைச் சக்கரவர்த்தியாயிருந்த கான்ஸ்தான்ஸியுஸ் ஆரிய சார்புடையவனாயிருந்ததால், இந்திய கிறிஸ்தவர்களைக் கவனிப்பதற்கு தெயோபிலஸ் என்ற ஆரிய (பதித) மேற்றிராணியாரை அனுப்பினான். இதனால் தங்களை அறியாமலே தோமையார் கிறிஸ்தவர்கள் ஆரிய பதிதத்தில் விழ நேர்ந்தது. மெதுவாக தோமையார் கட்டிய கோவில்களும் குறிப்பாக தென்பாண்டி நாட்டின் கிறிஸ்தவர்களின் ஆர்வமும் மறையத் தொடங்கியது. கோவில்கள் தகர்ந்து அழிந்தன. மணல் மாதா கோவிலும் இல்லாமல் மறைந்தது.

கி.பி. 530–ல் கப்பதோச்சியாவிலிருந்து ஜியார்ஜ் என்னும் பெயருடைய நெஸ்டோரியப் பிரிவினைக் கிறிஸ்தவ வேதபோதகரும் தென் இந்தியாவில் முகாமிட்டிருந்த யூதர்களும் சேர்ந்து கிறிஸ்தவ வேதத்தைப் பரப்பினார்கள். தென்தமிழ் நாட்டில் எங்கெல்லாம் புனித தோமையார் கிறிஸ்தவர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று வேதம் போதித்து புனித வேதசாட்சிகளாகிய ஜியார்ஜியார், ஆகத்தம்மாள், செசீலியம்மாள், பிரகாசியம்மாள், பார்பரம்மாள் ஆகியோரின் பக்தியைப் பரப்பி ஆலயங்கள் எழுப்பினார்கள். புனித தோமையார் வேதம் போதித்த சாலை வழியாக இவர்கள் பயணம் செய்து தோமையார் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த இடங்களைத் தேடிச் சென்று அவர்களை மீண்டும் வேதத்தில் ஸ்திரப்படுத்தினார்கள்.

இக்காலத்தில்தான் கேரளத்திலுள்ள எடத்துவாவிலும் நாஞ்சில் நாட்டிலுள்ள நிலப் பாறையிலும் புனித ஜியார்ஜியார் ஆலயங்களும், இரம்மது புரத்தில் புனித ஆகத்தம்மாள் கோவிலும் அணைக்கரையில் புனித பிரகாசியம்மாள் கோவிலும் சோமநாதபேரி பங்கிலுள்ள பார்பரம்மாள் கோவிலும், மணக் கரையிலுள்ள கித்தேரியம்மாள் கோவிலும் குறும்பூரில் புனித செசீலியம்மாள் கோவிலும் முக்காணியில் புனித எலேனம்மாள் கோவிலும் கட்டப்பட்டன. இவர்களது முயற்சியால் தான் அழிந்துபட்ட மணல் மாதா கோவில் புதுப்பிக்கப்பட்டது. மயிலாப்பூரில் தோமையார் கல்லறைத் திருத்தலத்தில் பிரபலமான ஓர் சந்நியாச மடமும் ஸ்தாபிக்கப்பட்டது.

இதே காலத்தில் அதாவது கி.பி 535–ல் கோஸ்மாஸ் (Cosmas Indicopleustes) என்னும் எழுத்தாளர் கூறுகிறபடி, பாரசீகத்தில் அபிஷேகம் செய்யப்பட்ட ஒரு மேற்றிராணியார் இலங்கையிலும் தென் இந்தியாவிலும் உள்ள கிறிஸ்தவர்களின் ஞான அதிகாரியாகச் செயல்பட்டு வந்திருக்கிறார்.

துளுஸ் நகரப் புனித கிரகோரியார் கி.பி. 590–ல் எழுதியுள்ளபடி, தியோடோர் என்னும் ஒரு திருயாத்திரீகர் சொன்னது என்னவெனில், "புனித தோமையாரின் திருச்சடலம் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் ஒரு பெரிய சந்நியாச மடமும் ஓர் அழகான தேவாலயமும் இருந்தன. அதுவே புனித தோமையார் தென்னிந்தியாவில் அப்போஸ்தல அலுவல் புரிந்ததற்கும் அங்கே அவர் வேதசாட்சியானதற்கும் அத்தாட்சியாகும்." ஆகவே தென்னிந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரை நாடுகளில் 6–வது நூற்றாண்டு வரை புனித தோமையார் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்துள்ளது தெளிவாகிறது.

அதன்பின் கி.பி. 920–ல் முதலாவது பாண்டியப் பேரரசு சோழர்களால் அழிக்கப்பட்டது. கி.பி. 1190–ல் ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சியில் மீண்டும் பாண்டியப் பேரரசு எழுச்சி பெற்றது. எத்தகைய அரசியல் மாற்றங்களிலும் தென்பாண்டி மண்டலத்தின் மானவீரநாடு மட்டும் கத்தோலிக்க குறுநில மன்னர்களாலேயே ஆட்சி செய்யப்பட்டு வந்தது. ஆயினும் போதிய குருக்கள், மேற்றிராணிமார்கள் வந்து இப்பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களைப் பராமரிக்காத காரணத்தால் நான்கு நூற்றாண்டு காலம் புனித தோமையார் கிறிஸ்தவர்கள் அழிந்து மறைந்து போக நேரிட்டது. மணல் மாதா கோவிலும் அது இருந்த இடமும் அடையாளம் இல்லாமலே போய்விட்டது!

மாதா காட்சி

அந்நிலையில், கி.பி. 1325–ம் ஆண்டு அது ஒரு சனிக்கிழமை. கணக்கன்குடியிருப்பில் அரசு அதிகாரியாக அலுவல் புரிந்து வந்தவர் ஒரு சிறந்த மாதாபக்தர். இவரது சொந்த ஊர் தோப்புவிளை. பெருந்தனக்காரர். இவரது பெயர் ஆகத்துமரியான். இவருக்கு பரலோக மாதா காட்சியில் தோன்றி கணக்கன் குடியிருப்பில் புனித தோமையார் முதலில் கோவில் கட்டிய இடத்தைச் சுட்டிக்காட்டி, அதே இடத்தில் ஒரு தேவாலயம் கட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். இக்காட்சி பற்றி அவர் மக்களிடம் கூறியதைக் கேட்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டு அவ்விடத்தை அடைந்தபோது அங்கே ஒரு நீரூற்றும், ஏற்கனவே கோவில் இருந்ததற்கான அஸ்திவாரமும் இருப்பதைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனார்கள். ஆகத்து மரியான். தனது சக்திக்கு ஏற்றபடி அழகிய சிறிய ஓர் ஆலயத்தைக் கட்டி

முடித்தார். மாதா காட்சிபற்றியும் புதிய மாதா கோவிலைப் பற்றியும் கேள்வியுற்று ஆங்காங்கே வாழ்ந்து வந்த பழைய தோமையார் கிறிஸ்தவர்களின் சந்ததியினர் புத்துணர்வு பெற்று மீண்டும் கணக்கன்குடியிருப்பில் வந்து குடியேறி மாதாகோவிலில் வழிபட்டு வந்தனர்.

வந். ஜியோவான்னி மரிஞ்ஞோலி ஆண்டகையவர்கள்

கி.பி. 1330-ம் ஆண்டில் சீனா தேசத்திற்கு பாப்பரசரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஒரு பிரான்சிஸ்கன் துறவியாகிய வந். ஜியோவான்னி மரிஞ்ஞோலி என்னும் புகழ்மிக்க மேற்றிராணியார் சீனாவுக்குச் செல்லும் வழியில் தென்னிந்தியாவில் வந்து பல ஆண்டுகள் தங்கி, புனித தோமையாருடைய திருத்தலங்களையும் தோமையார் கிறிஸ்தவர்களையும் தரிசித்து வேத போதகம் செய்து வந்தார். கொல்லத்தில் வந்து இறங்கிய இவர் முதலில் எடத்துவாவிலுள்ள புனித ஜியார்ஜியார் ஆலயப்பீடத்தை அழகிய வண்ண ஓவியங்களால் அழகு படுத்தினார். கேரளாவில் புனித தோமையார் எழுப்பிய ஏழு கோவில்களைத் தரிசித்தார். அதன்பின் புனித தோமையார் பயணம் செய்த சாலை வழியாக கணக்கன் குடியிருப்புக்கு வரும் வழியில் திருவிதாங்கோட்டில் புனித தோமையார் பரலோகமாதாவுக்கு எழுப்பிய கோவிலை மீண்டும் புதுப்பித்துக் கட்டினார். நிலப்பாறையில் புனித தோமையார் பிரசங்கம் செய்த குருசுமலையில் (கஞ்சோமலை) கற்சிலுவை ஒன்றை நட்டுவித்து, அங்கே அழிந்து போன புனித ஜியார்ஜியார் கோவிலைக் கட்டி எழுப்பினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக வந். மரிஞ்ஞோலி ஆண்டகையவர்கள் செய்த சிறப்புமிக்க அலுவல்யாதெனில், கணக்கன்குடியிருப்பில் அவரை வரவேற்று உபசரித்த ஆகத்துமரியான் மற்றும் தோமையார் கிறிஸ்தவர்களோடு தங்கி, வேதம் போதித்து, கி.பி. 1339-ம் ஆண்டில் அங்கே பரலோக மாதாவுக்கு கட்டப்பட்ட கோவிலைப் பெரிதாகக் கட்டி, அதிசய மணல் மாதா சுரூபத்தை ஸ்தாபித்தார். இதுதான் இப்போது மண்ணுக்குள் புதையுண்ட நிலையில் நாம் காணும் ஆலயமும் அதில் ஆசனம் கொண்டிருக்கும் மாதாவின் புதுமைச் சுரூபமும் ஆகும். இவ்வாலயம் பழங்கால தமிழ்க் கட்டட அமைப்பு முறையில் சிறு சிறு சுடு செங்கல்களாலும் சுண்ணாம்புக் கலவை சேர்த்த காறைச் சுதையினாலும்

கி.பி.1339-ம் ஆண்டில் மரிஞ்ஞோலி ஆண்டகையவர்கள்
கட்டி எழுப்பிய பரலோகமாதா கோவில்

கி.பி.1339-ம் ஆண்டில் மரிஞ்ஞோலி ஆண்டகையவர்கள்
ஸ்தாபித்த பரலோக மாதா சுரூபம்.

கட்டப்பட்டது. ஆலயத்தில் அவர் ஸ்தாபித்த பரலோக மாதா சுரூபம் அப்போதைய போர்த்துக்கீசிய கலையில் மரத்தால் செதுக்கப்பட்டது. அது அமைப்பில் அழகுடனும் உயரத்தில் சிறியதாகவும் உள்ளது. போர்த்துக்கீசிய கலை அமைப்பில் அழகு வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டிருந்த ஆலயப் பீடம் இப்போது மிக எளிமைத் தோற்றத்துடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. வந். மரிஞ்ஞோலி ஆண்டகையவர்கள் இங்கு வேத போதகம் செய்ததன் ஞாபகமாக தமது சபை ஸ்தாபகரான புனித் பிரான்சிஸ் அசிசியாரின் சுரூபத்தை இப்பீடத்தில் மாதாவுக்கு வலதுபுறத்தில் ஸ்தாபித்தார். அச்சுரூபத்தை இன்றும் நாம் காணலாம். (பலர் நினைப்பதுபோல் அது புனித அந்தோனியார் சுரூபம் அல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது).

ஆகவே நாம் இப்போது பூமிக்கடியில் காணும் அதிசய மணல் மாதா கோவிலை உருவாக்கிய பெருமை புகழ்மிக்க வந். ஜியோவான்னி மரிஞ்ஞோலி ஆண்டகையவர்களையே சாரும். பின்னர் ஆண்டகையவர்கள் மைலாப்பூர் சென்று புனித தோமையாருடைய கல்லறையைத் தரிசித்தபின் சீனாதேசம் சென்றடைந் தார்கள்.

அன்று முதல் கணக்கன்குடியிருப்பு ஊரும் பரலோகமாதா கோவிலும் இந்தியாவுக்கு வரும் வேதபோதகக் குருக்களைக் கவர்ந்திழுக்கும் பிரசித்தி பெற்ற திருத்தலமாக விளங்கலாயிற்று.

கணக்கன்குடியிருப்பு பங்கு

கி.பி. 1504 முதல் 1549 வரை நாற்பத்தைந்து ஆண்டுகள் தென்னிந்திய தோமையார் கிறிஸ்தவர்கள் மத்தியில் வந்து தங்கி வேதபோதகம் செய்த பிரபலமான மேற்றிராணியாண்டவர்தான் யாக்கோபு மார் அபூனா என்னும் ஆர்மேனிய ஆயர். (ஆர்மேனியர் என்றால் மெசோபொட்டேமியா நாட்டைச் சார்ந்தவர் எனப் பொருள்படும்). இவரது 45 ஆண்டுகால சேவையில் 15 ஆண்டுகள் கணக்கன்குடியிருப்பில் வந்து தங்கி வேதபோதகம் செய்த காலமாகும். அன்றுமுதல் கணக்கன்குடியிருப்பு மற்றுமுள்ள சுற்றுக் கிராமங்களுக்கு (சொக்கன்குடியிருப்பு உள்பட) தாய்ப் பங்காக இயங்கி வந்துள்ளது. இதை

எண்பிக்க "கணக்கன்குடியிருப்பைச் சேர்ந்த சொக்கன்குடியிருப்பு" என்னும் பழங்கால கல்வெட்டு ஒன்று சொக்கன்குடியிருப்பு பழைய கோவில் கதவு நிலையில் காணப்பட்டது.

கணக்கன்குடியிருப்பின் முதல் பங்குக் குருவாகிய (ஓய்வுபெற்ற ஆயர்) யாக்கோபு மார் அபூனா ஆண்டகையவர்களின் காலத்தில் அதாவது கி.பி. 1524 முதல் 1539 வரை அவருக்கு உறுதுணையாக பல பிரான்சிஸ்கன் சபை சந்நியாசிகள் மணல் மாதா கோவிலை மையமாக வைத்து வேதபோதகம் செய்துள்ளார்கள்.

மேற்கூறிய விபரங்கள் பற்றி புனித பிரான்ஸிஸ் சவேரியார் 1549 ஜனவரி 26–ம் தேதி எழுதிய கடிதத்தில் எழுதியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது: "ஆர்மேனிய ஆயரான யாக்கோபு மார் அபூனா அவர்கள் (நிசிபிஸ் நகருக்கருகிலுள்ள புனித எவுசேனியார் சபை சந்நியாசியார் – இவர் தோமையார் கிறிஸ்தவர்களுக்கு மேற்றிராணியாராக எலியாஸ் என்னும் ஆர்மேனிய பிதாப் பிதாவினால் அபிஷேகம் செய்யப்பட்டவர்) தென்னிந்தியப் பகுதியில் நாற்பத்தைந்து ஆண்டுகளாக தேவ ஊழியம் செய்தார். வயதானவர், புண்ணிய சீலர், புனிதர். பிரான்சிஸ்கன் சபைக் குருக்களே இவருக்கு உதவியாயிருந்து உழைத்தனர். தோமையார் கிறிஸ்தவர்களுக்காக இவர் வெகு பாடுகள் பட்டு உழைத்துள்ளார்."

புனித சுவாமிநாதர் சபைக் குருக்களும் இக்காலத்தில் இங்கு வந்து வேதபோதகம் செய்துள்ளனர். இதற்கு அத்தாட்சியாக குறும்பூர் அழகப்பபுரத்தில் சுவாமிநாதர் சபைப் புனிதரான வின்சென்ட் பெரர் (புனித விசேந்தியப்பர்) பெயரால் ஓர் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது.

புனித பிரான்சிஸ் சவேரியாரின் வருகை

போர்த்துக்கல் நாட்டு மன்னன் 3–ம் ஜாண் பாப்பரசர் 3–ம் சின்னப்பரிடம் விண்ணப்பம் செய்து, தென்னிந்தியாவில் வேதபோதகம் செய்ய புனித பிரான்சிஸ் சவேரியாரை பாப்பரசரின் பிரதிநிதியாக அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தார். அதன்படி சவேரியார் கி.பி. 1541 ஏப்ரல் 7–ம் தேதி (அவரது 36வது பிறந்த நாளில்)

உரோமாபுரியிலிருந்து புறப்பட்டார். 1542–ம் ஆண்டில் இந்தியாவந்து சேர்ந்த புனித சவேரியார், தென் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியையே தமது வேதபோதகத் தளமாகத் தேர்ந்து கொண்டார். கன்னியாகுமரி முதல் வேம்பாறு வரையிலும் கால்நடையாகவே சென்று வேதம் போதித்தார்.

முத்துக்குளித்துறை என அழைக்கப்படும் எழு கடல் துறைகளில் 1532–ல் (சவேரியார் வருவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்) ஞானஸ்நானம் பெற்ற இருபதாயிரம் புதிய கிறிஸ்தவர்களுக்கு வேதசத்தியங்களைப் போதித்து, தேவ திரவிய அனுமானங்களை வழங்க வந்த சவேரியார், கணக்கன் குடியிருப்பிலும் அதைச் சுற்றிலும் உள்ள "உள்நாடுகளில் தோமையார் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்ததைக் கண்டு சந்தோஷப் பட்டு, மணல் மாதா கோவிலில் வந்து தங்கி வேதம் போதித்தார்". இதற்கு அத்தாட்சியாக தம்பி நாயகம் என்பவர் தம் நூலில் குறிப்பிட்டுள்ள மேற்படி விபரத்தை கோட்டயம் நகர் செவாலியர் திரு. A.V. ஜியார்ஜ் அவர்கள் தமது ஆய்வு நூலில் மேற்கோளாக காட்டியிருப்பது இங்கு சிந்திக்க வேண்டியதாகும். கூடுதாழைக்கும் மணப்பாட்டிற்கும் இடையில் உள்ள பண்டகசாலை (பந்தக்கால்) என்னும் கணக்கன்குடியிருப்பை புனித சவேரியார் நாரையூர் என்றே அழைத்து வந்தார். நாரையூரிலிருந்து 1.5.1544–ல் அவர் பிரான்சிஸ்கோ மான்சிலாஸ் சுவாமியவர்களுக்கு எழுதிய கடிதம் இதை எண்பிக்கிறது. புனித சவேரியார் இங்கு வந்து வேதபோதகம் செய்ததின் நினைவாக மணல்மாதா கோவிலில் புனித இஞ்ஞாசியாரின் சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதை இன்றும் காணலாம்.

மணல் மாதா கோவிலில்
புனித சவேரியார் செய்த புதுமை

புனித சவேரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலில் 67–ம் பக்கத்தில் சங். F.W. பேபர் சுவாமியவர்கள் கூறுகிறபடி, கி.பி. 1544–ம் ஆண்டில் ஒரு நாள் புனித சவேரியார் பெரியதாழையிலிருந்து அந்தோனி மிராந்தா, அகுஸ்தீன் பீனா என்னும் இரண்டு இளைஞர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு பந்தக்கால்

(பண்டகசாலை) என்னும் கணக்கன்குடியிருப்புக்குச் சென்று மணல்மாதா கோவிலில் வேதபோதகம் செய்து திவ்வியபலிபூசை ஒப்புக்கொடுத்தார். அந்தோனி மிராந்தா பூசைக்கு உதவியாகவும் அகுஸ்தீன் பீனா உபதேசியாகவும் ஊழியம் செய்தனர்.

இரவில் சவேரியார் தங்கியிருந்த வீட்டை அடுத்த ஒரு குடிசையில் இரு இளைஞர்களும் தங்கினார்கள். அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது அந்தோனி மிராந்தாவை ஒரு நாகப்பாம்பு கடித்து விட்டது. பாம்பு கடித்ததை உணராத அவன் விடிவதற்குள் இறந்து பிணமாகிக் கிடந்தான். காலையில் எழுந்து தான் படுத்திருந்த பாயைச் சுருட்டிய அகுஸ்தீன், பாய்க்கடியிலிருந்து பயங்கரமான பாம்பு ஒன்று சரேலென்று ஓடி மறைவதைக் கண்டு மெய்சிலிர்த்து நின்றான். பரபரப்புடன் தன் நண்பனை உலுக்கி எழுப்பிய போது அவன் மரக்கட்டைபோல் இறந்து கிடப்பதைக் கண்ட அகுஸ்தீன் ஓடிச் சென்று புனிதரிடம் தெரிவித்தான். மக்கள் கூடிவிட்டார்கள். அந்தோனியின் பெற்றோர் விரைந்தோடி வந்தனர். அவனது தாய் அவனைத் தன்மடியில் வைத்து கதறி அழுதக் காட்சி அனைவரையும் அதிரவைத்தது. அனைவருமே கண்ணீர் சிந்தி அழுதுவிட்டார்கள்.

புனித சவேரியார் அமைதியாக அருகில் வந்து நின்றார். முழந்தாட்படியிட்டார். பரலோகத்தை நோக்கி கண்களை உயர்த்தினார். சற்று நேரம் உருக்கமுடன் ஜெபித்தபின், தனது எச்சிலைத் தொட்டு கடிப்பட்ட காயத்தில் தடவினார். சிலுவை அடையாளத்தால் அவனை ஆசீர்வதித்தார். அதன் பின் அவனது கரத்தைப் பிடித்து எழுப்பி: "அந்தோனி! சேசுகிறிஸ்து நாதருடைய நாமத்தினால் எழுந்திரு!" என்று கூறவே, அவன் உடனே உயிர் பெற்று எழுந்தான். எல்லாரும் அதிசய மணல் மாதாவை வாழ்த்திப் போற்றி நன்றி கூறினார்கள். அன்று முதல் பல்வேறு திசைகளிலிருந்தும் மக்கள் மணல் மாதா கோவிலுக்கு வந்து மாதாவின் பக்திமுயற்சிகளில் ஈடுபட்டு அநேக ஆத்தும சரீர வரங்களைப் பெற்றுவந்தார்கள்.

4

மணல் மாதா கோவில் மணலால் மூடப்பட்ட வரலாறு

புனித சவேரியார் காலத்திற்குப் பின் மானவீர நாட்டை ஆண்டு வந்த குறுநில மன்னர் "ஆகத்துக்குதவி" என்னும் கிறிஸ்தவப்பெயரால் அழைக்கப்பட்டார். இந்த உண்மையை கி.பி. 1639–ம் ஆண்டின் திருச்செந்தூர் முத்துகிருஷ்ணாபுரம் கல்வெட்டு தெரிவிக்கிறது. மணல்மாதா கோவில் கட்டுவதற்கு மாதாகாட்சி பெற்ற ஆகத்துமரியான் என்பவரது வாரீசாக வந்தவரே ஆகத்துக்குதவிப் பாண்டியன் ஆவார் எனலாம். அக்காலத்தில் மானவீர நாடு நீங்கலாக வேறெந்த நாடுகளிலும் கிறிஸ்தவ மன்னர்கள் இருந்ததற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

மாறாக மானவீர நாட்டைச் சூழ்ந்துள்ள நாடுகளில் பாண்டிய மன்னர்களாலும் சோழ, சேர மன்னர்களாலும் இந்து ஆலயங்கள் பல கட்டி எழுப்பப்பட்டிருக்கின்ற பொழுது, மானவீர நாட்டினுள் மட்டும் எந்த மன்னரேனும் தனியாரேனும் கட்டி எழுப்பிய ஆதிகாலத்து இந்துக் கோவில்களைக் காணமுடியாது. எனவே இம்மானவீர நாட்டை ஆரம்பகாலம் தொட்டு கி.பி. 1649 வரை கிறிஸ்தவ மன்னர்களே ஆண்டு வந்துள்ளனர் என்று தெரிகிறது.

துறவிப் பாண்டியன்

ஆகத்துக்குதவிப் பாண்டியனின் மகன் துறவிப் பாண்டியன் கி.பி 1648–ம் ஆண்டில் மானவீர நாட்டின் மன்னரானார். இவர் சிறந்த பக்திமான், உலகப் பற்று அற்றவர். எனவேதான் 'துறவிப்பாண்டியன்' என அழைக்கப்பட்டார். மாதா கோவிலையும் மக்கள் நலனையும் தனது இரு கண்கள் போல் கருதியவர். கோவில் வழிபாடுகள் மூலமாகவும் மக்களுக்கு நீதி வழங்குவதாலும் தான் ஒரு சிறந்த அரசன், தன்னலமற்ற மன்னவன் என்று பெயர் பெற மிகுந்த நாட்டமுள்ளவர். ஆனால் துறவு உணர்வுக்கும் அரச மகிமைக்குமிடையே சிக்குண்டு உழன்றார்.

மன்னனின் மந்திரியாக இருந்தவன் ஒரு பெருந்தனக்காரன். இவன் துறவிப்பாண்டியனை சூழ்ச்சியால் வீழ்த்தி அரச பதவியைக் கைப்பற்ற காலம் தேடிக் கொண்டிருந்தான். இவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் வீரபாண்டியன். நல்ல வாட்ட சாட்டமான உடம்பு. எதிர்த்துவரும் எட்டுபேரைத் தனியாக நின்று சமாளிக்கும் வலிமை. ஆனால் பரிதாபம் அறிவும் ஒழுக்கமும் அறவே அற்றவன். இவனுக்கு ஓர் ஆசை. சூசைமுத்து என்ற ஒரு வாலிபனுக்கு நிச்சயம் செய்யப்பட்ட ஓர் அழகிய மங்கையைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை! தன் தந்தையின் மந்திர ஆலோசனையால் மன்னனை ஏமாற்றி அரச வல்லமையால் தன் ஆசையை நிறைவேற்ற திட்டம் தீட்டிச் செயல்படலானான்.

சேசு மரியாயி

சேசுமரியாயி தான் அப்பேரழகு மங்கை! கணக்கன்குடியிருப்பில் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த தோமையார் கிறிஸ்தவர்களில் ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவள். எளிமையிலும் தெய்வபக்தியிலும் சிறந்து விளங்கியது அக்குடும்பம். பெற்றோருக்கு அவள் ஒரே பிள்ளை! மாதா மீது அளவில்லாத நேசம்! அசைக்க முடியாத பாசம்! வீட்டு வேலைகளை முடித்துவிட்டு எப்போதும் மாதா கோவிலில் தான் இருப்பாள். மற்ற சிறுவர், சிறுமியர் மாதாவை நேசிக்க கற்றுக் கொடுப்பாள். தன் ஆத்துமத்தையும் மாதா ஆலயத்தையும் எப்போதும் சுத்தமாக வைத்திருக்க கருத்தாய் உழைப்பாள். இவளது குழந்தைப் பருவத்திலேயே தகப்பனார் பனையிலிருந்து விழுந்து இறந்து போனார். மிகுந்த வறுமையிலும் இவளது தாய் தேவமாதாவை நம்பி கூலி வேலை செய்து மகளைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தாள். சேசுமரியாயி உண்மையிலேயே சேசுவுக்கும் மாதாவுக்கும் மிகவும் பிரிய பிள்ளையாக வளர்ந்து வந்தாள்.

குறித்த நாளில் சூசை முத்துவுக்கும் சேசுமரியாயிக்கும் மெய்விவாகம் நடைபெற்றது. வீரபாண்டியனின் முயற்சிகளெல்லாம் சேசுமரியாயின் பக்தியாலும் மாதாவின் விசேஷ வல்லமையாலும் தோல்வியடைந்தன. ஆவேசமடைந்த வீரபாண்டியன், தந்திரமாக சூசைமுத்துவைக் கொலை செய்துவிட்டு, அவன் ஒரு விபத்தில் இறந்து விட்டதாக கதைகட்டி ஊரை நம்ப வைத்து விட்டான். அது மட்டுமல்ல, இனி சேசுமரியாயி தனக்குச் சொந்தமானவள் எனக் கூற

ஆரம்பித்தான். இத்துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் சேசுமரியாயின் தாய் இருதயம் வெடித்து இறந்து போனாள்!

எவ்வித ஆதரவுமில்லாத அநாதைக் கைம்பெண்ணாக விடப்பட்ட சேசுமரியாயி மாதாவிடம் தஞ்சமடைந்தாள். அந்த மாசற்ற கன்னிகையின் வியாகுலப் பாடுகளின் முன் தனக்கு நேரிட்ட இந்த வேதனைகள் பெரிதல்ல, ஆயினும் தனது கற்பின் ஜோதியை அணையாமல் காப்பாற்றி நித்திய மணாளனாகிய சேசுநாதரின் வருகையின்போது அவரை எதிர் கொண்டழைக்கும் கன்னியர்களோடு மாதாவை வாழ்த்திப் புகழும் வரத்திற்காக இன்னும் எவ்வளவு துன்ப சோதனை ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்ள வல்லமை வரம் வேண்டுமென்று மாதாவிடம் மன்றாடினாள்.

மந்திரியின் விஷமூளை வேலை செய்ய ஆரம்பித்தது! தன்மகன் வீரபாண்டியனின் வலையில் சேசுமரியாயி ஒருநாளும் விழமாட்டாள். ஆனால் அவளை வைத்து அரசனைக் கவிழ்க்கச் சதித்திட்டம் ஒன்று தீட்டினான். நீதிநெறிதவறாதவன் துறவிப்பாண்டியன்! ஆனால் அவனை அநீத அரசன் என்று மக்கள் காணும்படிச் செய்து, அவனிடமிருந்து அரசைக்கைப்பற்றி வீரபாண்டியனை மானவீரநாட்டு மன்னனாக்க வேண்டும் என்பது தான் மந்திரியின் தந்திரம்!

மாதா காட்சி

சேசுமரியாயி மாதாவின் சித்தம் எப்படியோ அப்படியே தன்னை வழிநடத்தட்டும் என மாதாவிடம் தனக்கு வழிகாட்டும்படி உருகி வேண்டிக்கொண்டாள். ஒரு நாள் பரலோகமாதா சேசுமரியாயிக்கு காட்சியருளி: "தைரியமாயிரு மகளே! ஆண்டவர் உனக்குள் இருக்கிறார். ஒரணு ஜீவனுக்கும் உணவளிக்கும் அவர் உன்னைக் காப்பாற்றுவார். அவரது சித்தம் நிறைவேற உன்னை அவர் பயன்படுத்த விரும்புகிறார். இங்கே என் மகிமை விளங்க அவர் ஆசிக்கிறார். அதற்காக உன்னையே பலியாக்கு. உலகம் உள்ளவரை உன்பெயர் இங்கே நினைவு கூரப்படும்!" என்று கூறி மறைந்தார்கள்.

அதன்பின் சேசுமரியாயி தேறுதலடைந்து மாதாவின் கோவிலை சுத்தம் செய்து பராமரிக்கும் அலுவலில் பக்தியுடன் ஈடுபட்டாள். கோவிலைச் சுற்றியுள்ள அடர்ந்த மரங்களில் கூடுகட்டி குஞ்சு பொரித்து வாழ்ந்து வந்த விதவிதமான பறவைகள்தான் அவளுக்கு நண்பர்கள். அப்பறவைகளோடு அவள் மனம் விட்டுப்

பேசுவாள். அவைகளும் அவளுடன் வினோதமாகப் பழகி அவளிடம் விளையாடும். ஒருநாள் அவள். "பறவைகளே, நான் ஒவ்வொரு நாளும் நீங்கள் போடும் எச்சங்களை அகற்றி மாதா சந்நிதியைத் துப்புரவாக்கி வருகிறேனே! நீங்களாவது எனக்கு இரக்கம் காட்டி உதவக் கூடாதா?" என்று கேட்டாள். உடனே ஒரு பறவை கூச்சலிட அந்த சரணாலயத்திலுள்ள ஆயிரக்கணக்கான பறவைகள் அத்தனையும் கூச்சலிட்டு ஆகாயத்தில் எழுந்து ஒரு பெரிய மேகமூட்டம் போல் மாதா கோவிலைச் சுற்றி வானத்தில் பலமுறை வலம் வந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்து, பின் பெரும் குரல் சத்தத்துடன் இறங்கி வந்து சேசுமரியாயின் வீட்டைச் சூழ்ந்து நின்றன. இக்காட்சியைக் கண்டவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். ஆனால் பலர் எரிச்சல்பட்டு ஆத்திரமடைந்தார்கள்.

மறுநாள் விடியற்காலையில் வழக்கம் போல் வீட்டு முற்றத்தைத் துப்புரவு செய்ய வந்த சேசுமரியாயி, அங்கே எச்சங்களுக்குப்பதிலாக ஏராளமான மச்சங்கள்! சில துள்ளத்துடிக்க உயிருடன் கிடப்பதைக் கண்டாள். மகிழ்ச்சியுடன் மீன்களைச் சேகரித்த சேசுமரியாயி இது பரலோக மாதாவின் விசேஷ பராமரிப்பினால் ஆனது என்பதைக் கண்டுணர்ந்து மாதாவுக்கு நன்றி கூறினாள். கொஞ்சம் மீன்களை சமைத்து சாப்பிட்டாள். கோவிலில் தங்கியிருந்த திருயாத்திரைக்காரர்களுக்குத் தாராளமாக கொடுத்தாள். மீதியை விற்று கோவில் காணிக்கைப் பெட்டியினுள் போட்டுவிட்டாள். இது ஒரு நாள் நடந்த அற்புதம் என அவளும் மற்றவர்களும் நினைத்தார்கள். ஆனால் அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் நாரைகள் குளத்தில் மீன் பிடித்து வந்து சேசுமரியாயி வீட்டு முற்றத்தில் போடுவதைத் தினசரி பழக்கமாக்கிவிட்டன.

ஊர் மக்கள் மனதில் பொறாமைத் தீ பற்றி எரிய ஆரம்பித்தது. இத்தீயின் வெளிச்சத்தில் மந்திரியும் அவன் மகனும் தங்களது தீய திட்டத்தை உருவாக்கினார்கள். தாங்கள் தீட்டப் போகும் குற்றச்சாட்டுகளுக்கு மக்கள் மத்தியிலிருந்தும் அரச அவையிலும் போதிய சாட்சிகளை சாமர்த்தியமாக தயார் செய்தார்கள். பொறாமை, சுயநலம் கெடுமதி, அநியாயம் ஆகிய பாவங்களுக்கு அஞ்சாமல் ஊர் மக்கள் முழுவதும் தங்கள் பக்கம் வரும்படியாக சேசுமரியாயி பற்றிய அவதூறுகளை அள்ளி வீசினார்கள். தக்க தருணம்பார்த்து மன்னன் துறவிப் பாண்டியனின் கவனத்திற்கு இவ்விஷயத்தைக் கொண்டுவந்து, சேசுமரியா யின்மீது குற்றம் சுமத்தி நீதி வழங்கக் கோரி விண்ணப்பித்தான் வீரபாண்டியன்.

குற்றப்பத்திரிகையில் கூறியிருந்தது என்னவென்றால்: "மானவீர நாட்டின் மானத்தையே அவமதிக்கும் அளவுக்கு, சேசுமரியாயி என்னும் கைம்பெண் பகிரங்கமாக ஒரு கள்ளப் புருஷனோடு விபச்சாரம் செய்து வருகிறாள். இக்குற்றத்தை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும்படி மன்னரிடம் மண்டியிட்டு கேட்டு, மானவீர நாட்டின் மானத்தையும் மாண்பையும் காப்பாற்றும் படிக் கேட்டுக் கொள்கிறோம்".

அக்கால வழக்கப்படி விபச்சாரப் பாவத்திற்கு நடைவிளக்கெரித்துக் கொடுமையாகக் கொல்வது தண்டனையாகும். அதாவது குற்றவாளியின் தலையை மொட்டையடித்து தலையில் முள்முடி வைத்து உச்சியில் துளையிட்டு எண்ணெய் ஊற்றி தீ வைத்து எரிய விடுவது. அத்துடன் தோளில் சிலுவை சுமத்தி கழுத்தில் செருப்பு மாலை, எருக்குமாலை அணிவித்து தெருவில் ஊர்வலமாக இழுத்துச் செல்வது. தலையில் எரியும் தீ உடலெங்கும் பரவி குற்றவாளி துடி துடித்துச் சாக வேண்டும்.

இப்படிப்பட்ட கொடும் தண்டனையிலிருந்து சேசுமரியாயி தப்பித்துக் கொள்ள ஒரே ஒருவழி தான் உண்டு. அது வீரபாண்டியனுக்கு மனைவியாக சம்மதிப்பது. கடைசி முறையாக அவளுக்கு ஒரு வாய்ப்பு! வீரபாண்டியனே நேரில் சென்று சேசுமரியாயின் சம்மதத்தைக் கேட்கிறான். அது உறுதியாக மறுக்கப் படுகிறது: "சிலுவையில் அறையுண்டு மனிதர்களின் பாவங்களுக்காக தன்னையே பலியாக்கிய சேசு இரட்சகரோடு சேர்ந்து நான் பலியாக தயாராயிருக்கிறேன்". இப்படி திடமாக பதில் கூறிய வண்ணம் சேசுமரியாயி குற்றவாளிக் கூண்டில் ஏறினாள். அன்று 1649–ம் ஆண்டு பெரிய வெள்ளிக் கிழமை.

நடுவர் ஆசனத்தில் வீற்றிருக்கும் மன்னன் துறவிப்பாண்டியனுக்கு உண்மை தெரியும்! சேசுமரியாயி மாசற்றவள் என நன்கு தெரியும். இருந்தாலும் அவளுக்கு சாட்சிகள் இல்லை. அவளுக்கு சார்பாக தீர்ப்பிட்டால் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து அரச பதவியை இழக்க நேரிடும். அவளுக்கு எதிராகத் தீர்ப்பளித்தால், மன்னன் நீதி தவறிவிட்டான் என்னும் பழியைச் சுமக்க வேண்டும். இருதலைக் கொள்ளி எறும்புபோல் தத்தளித்தான் துறவிப்பாண்டியன். இப்படி ஓர் இக்கட்டான நிலைக்கு அரசனை உள்ளாக்கி அரசைக் கவிழ்ப்பது தான் மந்திரியின் திட்டம்.

விசாரணை ஆரம்பமானது. அரசன் சேசுமரியாயியைப் பார்த்து: "உனக்கொரு கள்ளக்காதலன் இருப்பதாகவும், அவன் தினமும் இரவில் உன் வீட்டுக்கு வருவதாகவும், அவன் தான் உனக்கு மீன் கொண்டு வந்து கொடுப்பதாகவும் கூறப்படுவது உண்மைதானா?" என்று வினவினான்.

"உண்மை அல்ல அரசே, மீன்களை நாரைகள் தான் கொண்டு வருகின்றன என்பதை யாவரும் அறிவார்களே!" என சேசுமரியாயி வினயமுடன் பதில் மொழிந்தாள்.

உடனே அங்கிருந்த அனைவரும் ஒரே குரலாய்: "இல்லை, இல்லை, மீன்களை நாரைகள் கொண்டு வரவில்லை" என்று உரக்கக் கத்தினார்கள். தொடர்ந்து : "இவள் இரவில் வெகுநேரம் ஒருவனோடு உரையாடிக் கொண்டிருப்பதை நாங்கள் கேட்டோம்" என்றார்கள்.

"அது உண்மைதானா?" என்று அரசன் கேட்க, "ஆம், அது உண்மைதான். நான் தினமும் என் இதய நேசரோடு உரையாடுவது உண்மைதான்" என்றாள்.

உடனே அனைவரும் எழுந்து உரத்த குரலில்... "ஆஹா அவளே தன் குற்றத்தை ஒப்புக் கொண்டுவிட்டாள். உடனே அவளுக்கு மரண தண்டனை வழங்கும், நடை விளக்கெரித்து கொல்லும், கொல்லும்" என்று கூக்குரலிட்டார்கள்.

"உன் இதய நேசர் பெயர் என்னவென்று சொல்", என அரசன் கேட்கவே, "அவர் ஆண்டவராகிய சேசுகிறிஸ்து நாதர்!" என்று தெளிவான குரலில் பதில் சொன்னாள் சேசுமரியாயி. உடனே எல்லாரும் : "இல்லை, இல்லை, இவள் தன் கள்ளக் காதலனின் பெயரை மறைக்கிறாள். இவள் ஒருவனோடு விபச்சாரம் செய்ததை நாங்கள் கண்டோம்" என்று பொய்ச்சாட்சி கூறினார்கள்.

சேசுமரியாயிக்கு சாதகமாக சாட்சி கூற ஒருவரும் இல்லாததால், துறவிப்பாண்டியன் அநியாயமாக தீர்ப்பு எழுதி : "மான வீர நாட்டின் மாண்புக்கு களங்கம் ஏற்படுத்தி விட்ட சேசுமரியாயிக்கு நடைவிளக்கேற்றி தண்டனை நிறைவேற்றும்படித் தீர்ப்புக்கூறுகிறேன்" – என்று வாசித்தான்.

பேய்கள் போல் எல்லோரும் துள்ளிக் குதித்து ஆரவாரம் செய்தார்கள். கொல்லுங்கள்! கொல்லுங்கள்! விபச்சாரியை தீயிட்டு எரித்துக் கொல்லுங்கள்!

என்று கூச்சலிட்டனர். "உங்களில் பாவம் செய்யாதவன் அவள் தலையில் நெருப்பிடட்டும்" என்று சொல்லியிருந்தால். அங்கே கூச்சலிட்ட யாருமே அங்கு நின்றிருக்கமாட்டார்கள்.

ஆனால் பாவிகள் பேய்களோடு சேர்ந்து, மாசற்ற சேசுமரியாயை அவமானமாய் இழுத்துச் சென்று செம்புள்ளி கரும்புள்ளி குத்தி, சாணத்தைக் கரைத்து அவள்மேல் ஊற்றி, செருப்புமாலை, எருக்குமாலை அணிவித்து முள்முடி சூடி, சிலுவையைத் தோளில் வைத்து தெருவெல்லாம் சுற்றி வரச் செய்து இறுதியாக பரலோகமாதா கோவில் முற்றத்தில் கொண்டு நிறுத்தி தலையில் இட்ட துளையில் எண்ணெய் ஊற்றினார்கள். நெருப்பை ஏற்றினார்கள்.

அப்போது வானம் திறந்தது, பேரிடி முழங்கியது, எக்காளம் தொனித்தது – தெளிவான குரலில் ஒரு தூதன் பேசுவது வானமெங்கும் எதிரொலிக்கும்படி கேட்டது. "இதோ நமது நேச குமாரத்தி – சேசுமரியாயி, நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுகிறாள். அவள் பாக்கியவதி. மோட்ச இராச்சியம் அவளுடையது!"

நெருப்பின் அகோரத்தால் துடிதுடித்த சேசுமரியாயி உயிர் விடுமுன் கடைசியாக கூறிய வார்த்தைகள்: "மாதாவே இதோ நான் வருகிறேன், இவர்களை மன்னியும் ....".

"வேண்டாம்!, வேண்டாம்! மன்னிக்கக் கூடாது! மன்னிக்கக்கூடாது" என்று கத்திக் கொண்டு மேடையிலேறினான் துறவிப்பாண்டியன். "மாசற்ற சேசுமரியாயியை அநியாயமாய்க் கொலை செய்த இந்தக் கொடுமைக்குத் தண்டனை! தண்டனை! ஆம் இந்த மகாப் பெரிய பாதகத்துக்குக் காரணமாயிருந்த நானும் இந்த நாடும் அழியட்டும்! மானவீர நாடு அழிந்து மண்மேடாகட்டும், வானம் திறந்து மண்மாரி பொழியட்டும்! அத்தனைபேரும் செத்தொழியட்டும்!" எனத் தன் மேலும் தன் மக்கள் மேலும் தேவ கோபாக்கினை இறங்கிவரும்படி சாபமிட்டான்.

மக்களெல்லாரும் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள்! மன்னனின் சாபம் அனைவரையும் நடுங்க வைத்தது. உடனே எங்கிருந்தோ வீசிய பேய்க்காற்றினால் செம்மண் மாரி பொழிந்தது! ஒரே நாளில் மானவீர நாடு முழுவதும் அழிந்தது. பரலோக மாதா ஆலயமும் மண்ணுக்குள் புதைந்து மறைந்துவிட்டது.

5

செந்தேரி மணல்மேரி மாதா

தென்பாண்டி மண்டலத்தின் பழமை வளமும் புராதனத் தமிழ் வரலாற்றுப் பெட்டகமும் ஆதி தோமையார் கிறிஸ்தவச் சுவடிகளும் தத்துவச் சின்னங்களும் நிறைந்துள்ள ஒரு "அதிசய உலகம்" இச் செம்மணல்தேரி எனும் இராட்சத திரையினுள் மறைக்கப்பட்டிருப்பதன் மர்மம்தான் என்னே!

இன்று நாம் ஹெலிக்காப்டர் மூலம் பயணம் செய்து, இராதாபுரம் தாலுகாவிலுள்ள கடற்கரை ஊராகிய கூத்தங்குழியிலிருந்து தொடங்கி ஆத்தங்கரைப் பள்ளி வாசல், அணைக்கரை, மன்னார்புரம், சாத்தான்குளம், நாசரேத்து, குரும்பூர் வழியாக திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள ஆறுமுகநேரி, கொம்புத்துறை வரை செல்வோமானால் இவ்வெல்லைக்குட்பட்ட ஊர்களெல்லாம் ஒரு பெரிய செம்மணல் மலைமேல் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இதே காட்சியைப் பெரியதாழை ஊரின் வடக்குப் பகுதியிலுள்ள தேரிமேட்டிலிருந்தும் காணலாம்.

ஆனால் வரலாற்றில் இடம்பெறாத ஒரு அதிசய உலகம் கி.பி. 1649 வரையிலும் இம்மணல் தேரிக்கடியில் தன்தரை மட்டத்தில் இயங்கிவந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அகழ்வு ஆராய்ச்சிகள் நடத்தினால் பல அதிசய உண்மைகள் தெரியவரும்.

இச்செம்மணல் தேரியினுள் மறைந்திருக்கும் அதிசய உலகிற்கு அரசியாக இருந்து ஆண்டுவந்த பரலோக மாதா, நூற்றைம்பது ஆண்டுகளுக்குப்பின் அதிசயமாக வெளிப்படுத்தப்பட்டு இப்போது இச்செம்மணல் குன்றின் தீபமாக, "அதிசய மணல்மேரி மாதாவாக" மகிமை பெற்ற அற்புத வரலாற்றினை இங்கு விளக்கிக் கூறுவோம்.

பாவத்தின் கோரவிளைவு எவ்வளவு அகோரமானது என்பதைக் காட்டும் அடையாளமே இம்மணல்தேரியாகும்! லூசிபேரின் ஒரே ஒரு பாவம் எரிநரகத்தை நித்தியத்திற்கும் உருவாக்கியது! ஆதாம் ஏவாளின் முதல்பாவம் உலகம்

முழுவதையும் ஒரு கண்ணீர்க்கணவாய் ஆக்கியது! நோவாவின் காலத்து மக்களின் பாவம் ஜலப்பிரளயத்தால் உலகத்தையே அழித்தது! ஆபிரகாம் காலத்து அசுத்த மோகபாவம், சோதோம், கொமோரா பட்டணங்களை எரித்து சாம்பலாக்கியது. அப்படியே மானவீரநாட்டு மக்களும் மன்னனும் செய்த பாவத்தினால் அம்மன்னனின் வார்த்தைகளினாலேயே அந்நாடு முழுவதும் சபிக்கப்பட்டு வானத்திலிருந்து மணல்மாரி பொழிந்து மண்மேடாகி, ஆறுகள் வறண்டன, வயல்களும் சோலைகளும் மறைந்தன, அழகிய பந்நாட்டு நாரைகள் பறந்தன, முட்களும் புதர்களும் படர்ந்தன, மக்கள் குடியிருப்புகள் நகர்ந்தன, அழகிய ஆலயங்களும் அரண்மனைகளும் தகர்ந்தன, அத்தனையும் உடைந்தன தொலைந்தன, பாழாகி அழிந்து ஒழிந்தன!

ஆயினும் கடவுள் மனிதர்களுக்கு ஒரு மீட்பரை வழங்கி, அவர்களை இரட்சித்துப் பேரின்ப வாழ்வை மீண்டும் அவர்கள் அடைவதற்காக, தமது தாயா ராகிய கன்னி மரியாயை நித்திய பெண்மணியாக ஏற்படுத்தியிருக்கும் மாபெரும் திட்டத்தை இக்கடைசி காலத்தில் நமக்கும் உலகிற்கும் உணர்த்தும் ஓர் உன்னத உபாயமாகவே தென்பாண்டி நாட்டின் இச்செம்மணல் தேரியைத் தேர்ந்து கொண்டார். ஆகவே இம் மணல் மலையின் நாயகியாக அதிசயமாய் வெளிப் படுத்தப்பட்ட "மணல்மேரி மாதா" வழியாக மானவீரநாட்டின் சாபம் நீங்கி மக்கள் அனைவரும் சேசுநாதர் சுவாமியின் இனிய ஆட்சியின் மகிமையைக் காண வேண்டும். அதற்கு நிபந்தனையாக இந்த இடத்தில் அதிக ஜெபம்! அதிக தவம்! அதனால் பாவப்பரிகாரம் நடைபெற வேண்டும். இம்மாபெரும் பரலோகத் திட்டம் தான் இம்மணல் தேரி என்னும் இராட்சத திரையினுள் மறைந்திருக்கும் மர்மமாகும்.

மாதா ஆலயம் வெளிப்பட்ட வரலாறு

கி.பி. 1649-ம் ஆண்டில் நடந்த அழிவுக்குப்பின் நூற்றைம்பது ஆண்டுகள் கழிந்தன. கணக்கன்குடியிருப்பிலுள்ள பரலோகமாதா ஆலயம், மானவீர நாடு, அதைச்சுற்றியுள்ள இதர நாடுகள் யாவும் மண்ணுக்குள் மறைந்து போனதை எல்லாரும் மறந்துவிட்டனர். அதன்பின் வந்த வரலாற்று ஏடுகளிலும் அவை இடம்பெறவில்லை. வரலாற்றில் இடம் பெறாத பல உண்மைகள் அங்கே உள்ளன என்பதை உலகம் அறியும் படியாக, கடவுள் இவ்வதிசய மணல் மாதா கோவிலை வெளிப்படுத்தச் சித்தமானார்.

புனித சவேரியார் காலத்திற்குப்பின் சேசுசபைக் குருக்கள் வந்து இப்பகுதியில் தேரிக்குமேல் கட்டப்பட்ட ஊர்களைக் கண்காணித்து வந்தனர். தூத்துக்குடி, வடக்கன்குளம் ஆகிய ஊர்களில் தான் குருக்கள் நிரந்தரமாக தங்கியிருந்தனர். அப்போது புத்தன் தருவைக்கு வடக்கே இருந்த சொக்கன்குடியிருப்பு வடக்கன்குளம் பங்கோடு இணைந்திருந்தது. தருவைக்குத் தென்புறம் (சாபத்தால் அழிந்த கணக்கன்குடியிருப்பு இருந்த இடம்) முட்புதர்களடர்ந்த தேரிக்காடாகவும் பள்ளத்தாக்குகளுமாய்க் காட்சியளித்தது. தருவையை அடுத்துள்ள மணல் மேட்டில் சில ஆலமரங்கள், அத்திமரங்கள், பனைமரங்களடர்ந்த ஒரு நிழற்சோலை! அங்கே ஆடு மேய்க்க வருகிறவர்கள் இந்நிழற்சோலையில் தங்கி ஓய்வெடுப்பார்கள்.

மாதா காட்சி

அன்று மாதா பிறந்த நாள்! செப்டம்பர் மாதம் 8–ம் தேதி 1799–ம் ஆண்டு. ஆடு மேய்க்கும் ஒரு சிறுவன் – அவன் பெயர் சவரியப்பன். சொந்த ஊர் சொக்கன்குடியிருப்பு. இவன் ஆடுகளை மேயவிட்டு விட்டு ஆலமரத்து நிழலில் படுத்திருந்தான். திடீரென மரத்தின் கிளைகளுக்கிடையே பேரொளி ஒன்று தோன்றியது! சற்றுநேரத்தில் அது மறைந்துவிட்டது. பரபரப்புடன் எழுந்து ஆடுகளை ஓட்டிக் கொண்டு தருவையை நோக்கி விரைந்தான். படாரென்று காலில் ஏதோ தட்டியது. இடறி விழுந்தான். கால் விரல்களைத் தடவி விட்டுவிட்டு மீண்டும் விரைந்தான் தருவையை நோக்கி.

அதோ! அந்தப் பேரொளி மீண்டும் தோன்றியது! எண்ணற்ற வானவர்களின் இனிய பாடல்ஒலி இதமாக இசைத்தது! பகல் 12 மணி! மின்னல் வெட்டியது! சவரியப்பன் கண்களை மூடிக் கொண்டான். "மகனே!" என்னும் குரலைக் கேட்டு கண்களைத் திறந்தான். ஆ! என்ன ஆச்சரியம்! சம்மனசுக்கள் புடை சூழ பரலோகமாதா அவன் முன்னே வந்து நின்றார்கள்! மெய்சிலிர்த்து நடுங்கிய அவனைப் பார்த்து தேவமாதா புன்னகைத்து : "பயப்படாதே மகனே! நீ தடுக்கி விழுந்த இடத்தில் சென்று தரையைத் தோண்டிப் பார்!" எனக் கூறிவிட்டு மறைந்துவிட்டார்கள்!

சவரியப்பன் விரைந்து சென்று அந்த இடத்தில் மணலுக்கு மேல் நீண்டு நின்ற மரக்கட்டையைப் பார்த்தான். ஆவலோடு தன் கரங்களால் மணலைத் தோண்டினான். அழகான ஒரு சிலுவை! உடனே ஓடினான் ஊருக்கு. நடந்தவை அனைத்தையும் கூறினான். சொக்கன்குடியிருப்பு மக்கள் திரளாக விரைந்தோடி வந்தார்கள். இன்னும் தோண்டினார்கள் ஆழமாக. அது ஒரு ஆலய முகப்புச் சிலுவை எனக்கண்டு ஆச்சரிய முற்றார்கள், ஆனந்தமடைந்தார்கள்.

செம்மணல் தேரியில் கண்ட இவ்வதிசயம் வடக்கன்குளத்திலிருந்த விசாரணைக் குருவானவருக்கு உடனே ஆளனுப்பி அறிவிக்கப்பட்டது. அப்போது வடக்கன்குளம் கொச்சி மேற்றிராசன ஆளுகையின்கீழ் இருந்தது. ஏற்கெனவே 1773–ல் சேசுசபை கலைக்கப்பட்டு, சேசுசபைக் குருக்கள் வெளியேறிவிட்டபடியால், பாண்டிச்சேரி மிஷனைச் சேர்ந்த குருக்கள்தான் வடக்கன்குளத்தில் வந்து போதக அலுவல் புரிந்தனர். அவர்களுள் பெயர் குறிப்பிடப்படாத ஒரு குருவானவர்தான் முதன்முதலில் மணல்மாதா கோவில் அகழ்வுப் பணியைத் தொடங்கிவைத்தார்.

அவர் சொக்கையூர் மக்களின் மிக்கார்வத்தினைக் கண்டு அப்படியே சொக்கிப்போனார் எனலாம். (வேதபோதகக் குருக்களைச் சொக்கவைப்பவர்கள் சொக்கன்குடியிருப்பு மக்கள் என்பது அன்றுமட்டுமல்ல, இன்றும் உண்மை தான்!) பங்குக்குருவானவர் தக்க தருணத்திலே திரளான மக்களோடும் ஏராளமான அகழ்வுக் கருவிகளோடும் வந்து மணல் மேட்டில் குடிசை அமைத்துத் தங்கி ஆலய அகழ்வுப் பணியை முன்னின்று நடத்தினார்.

இது மாதா காரியமன்றி வேறு காரியமாக இருந்திருந்தால் இலட்சக்கணக்காக பணம் செலவு செய்யவேண்டியிருந்திருக்கும். எவ்வித கூலியோ கைம்மாறோ எதிர்பாராமல் மாதாவின் மீதுள்ள பக்தியார்வத்தினால் உந்தப்பட்டு சிறியோர் பெரியோர், படித்தோர் பாமரர் அனைவரும் திரண்டு வந்து இரவென்றும் பகலென்றும் பாராமல் மாதாவை வாழ்த்திப் பாடியும் ஜெபித்தும் உற்சாகமுடன் தோண்டி எறிந்தார்கள் அம்மணல் மேட்டினை. இத்திருப் பணியினைக் கேள்வியுற்று சுற்றுப்புற ஊர்களிலுள்ள மக்களெல்லாம் விரைந்து வந்து ஜாதி மத வேறுபாடின்றி ஆர்வமுடன் ஊக்கமும் உதவியும் கொடுத்தார்கள். தனவந்தர்கள் பலர் முன்வந்து அரிசி, பயிறு போன்ற விளைபொருட்களை வழங்கி வேலை செய்யும் ஏழை மக்களுக்கு உணவு வழங்கினார்கள்.

மூன்று நான்கு வாரங்களுக்குள் மாதா ஆலயம் முழுவதுமாக வெளிக் கொணரப்பட்டது. அவ்வாண்டு அக்டோபர் 7–ம் தேதி, ஜெபமாலை மாதாதிருநாள். பங்கு சுவாமியவர்களால் குறிக்கப்பட்ட நாள். அன்று மக்கள் எல்லாரும் கோவிலின் முன்னால் வந்து திரளாகக் கூடினார்கள். கோவிலைச் சுற்றி முழங்காலிலேயே ஜெபமாலை ஜெபித்து, மாதா பிரார்த்தனையைப் பாடிக் கொண்டு பவனியாக ஆலயக் கதவண்டை வர, “ஆவே மரியா! ஆவே மரியா!” என்னும் வாழ்த்தொலி முழங்க பங்குசுவாமியவர்கள் “பரலோகத்தினுடைய வாசலே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!” என்று சொல்லியவாறு ஆலய வாசலைத் திறந்தார்கள்.

ஆலயத்தில் கண்ட அதிசயம்

முதலில் குருவானவரும் பிறகு மக்களும் பக்திபயத்தோடும் மாதாவின் மேலுள்ள பாச ஆர்வத்தோடும் கண்ணீர் சிந்தி ஜெபித்த மேரையாய் உள்ளே நுழைந்தார்கள். ஆ! அங்கே அவர்கள் கண்ட அதிசய காட்சியில் அனைவரும் அப்படியே முகங்குப்புற விழுந்துவிட்டார்கள்! ஆனந்தக் கண்ணீரால் அனைவரும் ஆ!அம்மா! அம்மா!! மாதாவே! மாதாவே!! என்று ஆர்ப்பரித்தார்கள். ஏனெனில் மாதாவின் சுரூபத்தின்முன் இரு பக்கத்திலும் இரண்டு மெழுகுவர்த்திகள் அதிசயமாக எரிந்து ஒளிவீசிக் கொண்டிருந்தன! நூற்றைம்பது ஆண்டுகள் இம்மெழுகுவர்த்திகள் கரையாமலும் அணையாமலும் எரிந்து கொண்டேயிருந்து மண்மூடிய மாதா சந்நிதியை ஒளிர்வித்துக் கொண்டு வந்திருக்கின்றன! உடனே எல்லாரும் அந்த அதிசய ஒளியினால் தங்கள் கையிலிருந்த மெழுகு வர்த்திகளை ஏற்றி மாதா கோவிலை ஒளிரச் செய்தார்கள்.

அதுமட்டுமல்ல ஆலயம் முழுவதும் ஒருவித நறுமணவாசம் பரவி நின்றது. ஆ! இது என்ன மணம்! என்று எல்லாரும் அதிசயித்தார்கள். ஆம் அது ஒன்றும் நம்பமுடியாத காரியம் அல்ல. மாதா தமது கல்லறையினின்று பரலோகத்துக்கு ஆரோகணமானவுடன் மூன்று நாட்கள் மெழுகுவர்த்திகள் கரையாமலும் அணையாமலும் எரிந்ததில்லையா? கல்லறையில் அற்புதமாக மலர்கள் பூத்து நறுமணம் வீசவில்லையா?

ஆலயப் பீடத்திலே 1339–ம் ஆண்டில் வந். மரிஞ்ஞோலி ஆண்டகையவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பரலோகமாதாவின் அழகிய சுரூபம் மக்களைப் பார்த்து பரலோகப் புன்முறுவலுடன் "வாருங்கள் என் பிள்ளைகளே" என்று அழைத்த மேரையில் தோன்றியது. ஒரு கரத்தில் செங்கோலும் மறுகரத்தில் திவ்ய பாலகனும், சிரசில் மகுடமும் பன்னிரு விண்மீன்களும் விளங்க மாதாவின் பாதத்தில் சம்மனசுக்கள் மாதாவை ஏந்திச் செல்வது போன்ற காட்சி. அப்பப்பா! எல்லாரும் கண்மூடாமல் மாதாவைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனார்கள்!

மாதாவுக்கு வலது புறத்தில் வந்.மரிஞ்ஞோலி ஆண்டகையவர்களே ஸ்தாபித்திருந்த தமது சபை ஸ்தாபகராகிய புனித பிரான்சிஸ் அசிசியார் சுரூபமும், சேசுசபை ஸ்தாபகர் புனித லொயோலா இஞ்ஞாசியாருடைய சுரூபமும் அப்படியே அழகு மங்காமல் இருந்தன. மணல் மாதா ஆலயத்தில் அன்று முதல் விடாமல் இரவும் பகலும் மக்கள் வந்திருந்து ஜெபிப்பதும், தொடர்ந்து சரிந்து விழுந்து கொண்டிருந்த மணலை அப்புறப்படுத்துவதும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று முதல் மீண்டும் சேசு சபைக் குருக்கள் அனுப்பப்பட்ட 1838–ம் ஆண்டுவரை பாண்டிச் சேரி மிஷன் குருக்கள் மணல் மாதா கோவிலை அடிக்கடி தரிசித்து பராமரித்து வந்தார்கள்.

6

மணல் மாதா கோவில் மாபெரும் திருத்தலமாக மாண்புற்ற வரலாறு

கி.பி. 1838–ல் மீண்டும் சேசுசபைக் குருக்கள் வேதபோதகத் தளங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். கி.பி. 1843–ம் ஆண்டு சங். கஸ்தானியர் சுவாமியவர்களும் 1851–ல் சங். வெர்டியர் சுவாமியவர்களும் வடக்கன் குளம் பங்குக்குருக்களாக நியமிக்கப்பட்டு மணல்மாதா கோவிலைக் கண்காணித்து வந்தனர். 1861–ல் சங். டேனிஷ்குஷன் சுவாமியவர்கள் சாத்தான்குளம் பங்கு சுவாமியாராக நியமிக்கப்பட்டு மணல் மாதா கோவிலை 1880 வரைப் பராமரித்து வந்தார்கள்.

சங். ஜாண் மேஞ்செல்லா சுவாமி

கி.பி. 1880–ம் ஆண்டு அணைக்கரை, சொக்கன்குடியிருப்பு ஆகிய இரு பங்குகளையும் ஒன்றாக இணைத்து வேதபோதகம் செய்யப் பொறுப்பேற்று வந்தவர் சங். ஜாண் மேஞ்செல்லா (Fr. John Mangella) என்னும் அருளப்பநாதர் சுவாமியவர்கள், மணல்மாதா கோவில் என்றால் இவருக்கு ஒரு தனி அன்பும், அதை மீண்டும் மணல் மூடாதிருக்க தணியாத ஆர்வமும் உண்டு. இதுவரை மாதாகோவிலின் தலை வாசல் வழியாக மணல் சரிந்து ஆலயத்தினுள்ளே வந்து குவிந்து கொண்டே இருக்கும். மிகுந்த சிரமத்தோடு மக்கள் மணலை அகற்றிக் கொண்டே இருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற சங். மேஞ்செல்லா சுவாமியவர்கள் பெருஞ்செலவு செய்து மக்களின் உழைப்புடன் மாதா கோவிலுக்கு முன் ஒரு மண்டபம் அமைத்து கோவிலினுள் மணல் சரிந்து விழாதபடிச் செய்தார்கள். இவ்வாறு மணல் மாதா கோவில் திருப்பணியை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தவர் இவரேயாவார்.

அது மட்டுமல்ல சங். மேஞ்செல்லா சுவாமியவர்களின் காலத்திலேதான் மணல்மாதா கோவில் ஒரு திருயாத்திரைத் தலமாக உருவாகியது. மிக இக்கட்டான

சூழ்நிலையில் மாதாவின் உதவியை நாடி மக்கள் மணல்மாதா கோவிலுக்கு வரும் பழக்கம் அதிகரித்தது. நோயினால் உயிருக்கு ஆபத்து நேரிட்டபோது குறிப்பாக காலரா போன்ற பயங்கர நோயினால் தாக்கப்பட்டவர்கள், மருத்துவர்களால் கைவிடப்பட்ட வியாதியஸ்தர்கள் மணல்மாதா திருத்தலத்திற்கு வந்து மாதாவிடம் ஜெபிப்பது வழக்கமாகி விட்டது. குணம் பெற்ற அநேகர் நன்றிக் காணிக்கையாகவும் நேர்ச்சையாகவும் பணம், பொருள் காணிக்கைகள் கொண்டு வந்தனர். ஏராளமான மெழுகுவர்த்திகளைக் கொண்டு வந்து கோவிலில் ஏற்றிவைத்து ஜெபித்தனர். அன்று முதல் மக்கள் மணல்மாதா கோவிலில் வந்து நேர்ச்சைக்காக வாரக்கணக்கில் தங்கியிருந்து ஜெபித்துக் குணம்பெற்றுச் சென்றார்கள். ஏராளமான அற்புதங்கள் நடைபெற ஆரம்பித்தன.

சங். மேஞ்செல்லா சுவாமியவர்கள் தொட்டு ஆசீர்வதித்த குஷ்டநோயாளிகள், பேய்பிடித்தவர்கள், முடவர்கள் பலர் மணல்மாதாவின் அருளால் குணமடைந்தார்கள். ஆகவே சுமார் எண்பது கிலோமீட்டர் சுற்றளவில் வாழ்கின்ற மக்கள் மணல் மாதாவிடம் ஆழ்ந்த பக்தி கொண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது இங்கு திருயாத்திரையாக வருவார்கள்.

மேற்கூறிய விபரங்களை 1886–ல் சங். டேனிஷ்குஷன் சுவாமியவர்கள் "மதுரைமிஷனில் 50 ஆண்டுகள்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியபடி: "இத்திருத்தலம் உருவாவதில் சங். மேஞ்செல்லா சுவாமியவர்களின் பங்கு அளப்பரியது. அவர் இவ்வாலயத்தை தன் உயிரினும் மேலாக நேசித்தார்".

அதன்பின் 1890–ல் சங். பாமல் (Fr. Baumal) சுவாமியவர்களும் 1900–ல் சங். குத்தூரியர் சுவாமியவர்களும் மணல் மாதா கோவிலைப் பொறுப்பேற்று கண்காணித்து வந்தார்கள். 1902–ல் மீண்டும் சொக்கன்குடியிருப்பு சாத்தான்குளம் பங்கோடு இணைக்கப்பட்டு சங். சூசைமாணிக்கம் என்ற மேற்றிராசனக் குருவானவரின் கண்காணிப்பில் மணல்மாதா கோவில் ஒப்படைக்கப்பட்டது.

சங். இஞ்ஞாசியார் சுவாமி
மணல் மாதா பக்தன்

கி.பி. 1912–முதல் 1923 வரை சங். சாபாத்தியர் சுவாமியவர்கள் சாத்தான் குளத்தில் பங்குக் குருவாயிருந்தபோது அவருக்குத் துணைக் குருவாக இருந்த

சங். Y. இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் மணல் மாதாவின்மேல் விசேஷ பக்தி பற்றுதல் கொண்டு மணல் மாதா திருத்தலத்தை அதிக அக்கறையுடன் தரிசித்து அக்கோவிலைப் புதுப்பித்து மாதாவின் புகழைப் பரப்ப ஆர்வமுடன் ஈடுபட்டார்கள். ஆகவே மக்களெல்லாரும் இவரை "மணல் மாதா பக்தன்" என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

1923–ம் ஆண்டு தூத்துக்குடி மேற்றிராசனம் தனி மேற்றிராசனமாக உதயமாகிய அதே ஆண்டில் சொக்கன்குடியிருப்பு தனிப்பங்காக அறிவிக்கப்பட்டு, சங். சுவாமிநாதர் சுவாமியவர்கள் 1928 வரையிலும், சங். பங்கார் சுவாமியவர்கள் 1935 வரையிலும், மீண்டும் சங். சுவாமிநாதர் சுவாமியவர்கள் 1937 வரையிலும் சொக்கன்குடியிருப்பு பங்குக்குருக்களாக இருந்து மணல்மாதா திருத்தலத்தைப் பராமரித்து வந்தார்கள்.

மணல் மாதா திருத்தலத்தின் பொற்காலம் உதயம்

மணல்மாதாவின் அன்பையும் அருளையும் சிறுபிராய முதலே அடைந்து, அநேகம் தடவைகள் மாதாதிருத்தலத்திற்குவந்து ஜெபித்து, மாதாவின் விசேஷ கொடையாக தேவ அழைத்தல் பெற்று குருவானவராகிய சங். Y. இஞ்ஞாசியார் சுவாமியவர்கள், 1937–ல் சொக்கன்குடியிருப்புக்கு பங்குக் குருவாக வந்தார்கள். அன்னாரது வருகை மணல்மாதா திருத்தலத்திற்கு பொற்கால உதயம் என்று சொன்னால் அது மிகையாகாது.

வேதபோதக அலுவல் என்பது அவரது கண்போன்றதென்றால், தேவமாதா பக்தி என்பது அவரது கண்ணின் மணி போன்றது. சொக்கன்குடியிருப்பு பங்குமக்களை அவர் தன் செல்லப் பிள்ளைகளாகப் பாவித்து நேசித்தார். அதைவிட மேலாக மணல்மாதா திருத்தலத்தை தன் இருதயமாகக் கருதி அன்பு செலுத்தினார். மாதாதிருத்தலம் மாண்புற இவர் மாதாவிடமே ஆலோசனை கேட்டு மன்றாடினார். மாதாவும் இவரோடிருந்து ஏவுதல் தந்து, "சேசுநாதரின் அப்போஸ்தலர் "புனித தோமையார் முதன் முதல் கால்வைத்து மாதாவுக்குக் கோவில் கட்டிய இத்தலத்தில், "மாதாவின் அப்போஸ்தலராக" சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்களே வந்து, மணல் மாதா தேவாலயத்தை நிரந்தரமாகக் காப்பாற்றி மாண்புறச் செய்யும்படி மாதா பல அற்புதங்களைச் செய்தார்கள்.

புதுமைக் குடிநீர் கிணறு

முதல் அற்புதம் 1938–ம் ஆண்டில் நிகழ்ந்தது. மணல் மாதா கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை! இந்தக் குறையை நீக்கும்படி சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் மாதாவிடம் உரிமையோடு கேட்டு ஜெபித்தார்கள். மாதா தமது சம்மனசுக்களில் ஒருவரை அனுப்பி, புனித தோமையார் காலத்தில் சுரந்த ஒரு நீரூற்றைக் காட்டும்படி புதுமை செய்தார்கள். அந்த நீரூற்று இப்போது உள்ள தேரி மண் மேட்டிலிருந்து 50 அடிக்குக் கீழ் இருந்தது. அதை சுவாமியவர்களுக்குக் காண்பித்து, அந்த இடத்திலே ஒரு கிணறு வெட்டி புதுமைக் குடிநீர் பெற்ற சுவையான நிகழ்ச்சியை சுவாமியவர்களே நேரில் கூறக் கேட்ட திரு. K. மரிய பங்கிராஸ் அவர்கள் எழுதியதை இங்கு தருகிறோம்.

“1946–ம் ஆண்டு என நினைக்கிறேன். சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் சொக்கன்குடியிருப்பில் பங்குக் குருவாயிருந்த காலம். அப்போதும் (இப்போதுபோல்) சனிக்கிழமை தோறும் மணல் மாதா கோவிலில் திவ்வியபலிபூசை நடைபெறும். ஆனால் அதிகாலை 5.30 மணிக்குப் பூசை துவங்கும். எனவே பள்ளி மாணவர்கள் பலர் வெள்ளிக்கிழமை இரவிலேயே மணல் மாதா கோவில் சென்று விடுவதுண்டு. சங். சுவாமியவர்கள் இரவு உணவுக்குப்பின் கோவிலுக்குத் தென்புறமுள்ள தேரியில் நாற்காலிபோட்டு உட்கார்ந்து தாடியை வருடிக் கொண்டே இருப்பார்கள். நான் சங். சுவாமியிடம் பிள்ளைக்குரிய பாசத்துடன் நாற்காலி அருகில் உட்கார்ந்து அவர்கள் தம் அனுபவத்தைக் கூறக் கேட்டுக் கொண்டே இருப்பதுண்டு. ஒருநாள் அந்த நேரத்தில், “இந்த இடத்தில் குடி தண்ணீர் எப்படிக் கிடைத்தது தெரியுமா?” என்று துவக்கினார்கள். நானும் ஆர்வமுடன் செவிமடுத்தேன். “குடிதண்ணீர் இல்லாமல் இங்கு மக்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து எப்படியாவது குடி தண்ணீருக்கு ஒரு கிணறு தோண்டணும் என்று முதலில் கோவிலுக்கு முன்னால் சுமார் இருபது கெஜ தூரம் (60 அடி) தள்ளி தோண்டினோம். சுமார் ஒரு பனை ஆழம் தோண்டியபோது தான் ஒரு வீட்டுக்கூரை தென்பட்டது. தோண்டியவர்கள் மலைத்துப் போனார்கள். இதன்பிறகுதான் தன்தரை தட்டுப்படும். அதற்கும் எவ்வளவு ஆழத்தில் தண்ணீர் கிடைக்குமோ என்று எண்ணி முயற்சியைக் கைவிட்டுவிட்டோம். எனக்கு ஒரே

கவலையும் சிந்தனையும். அப்படி ஒருநாள் கவலையோடு சிந்தித்துக் கெண்டிருந்தபோது மேற்கிலிருந்து வாலிபன் ஒருவன் என்னிடம் வந்து, 'சுவாமி, நீங்கள் கிணறு எந்த இடத்தில் தோண்டலாம் என்று தானே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்? எனக்குத் தண்ணீர் இருக்கும் இடம் பார்க்கத் தெரியும். என்னோடு வாருங்கள்' என்று அழைத்துச் சென்றான். என்னை அறியாத ஒரு சக்தியினால் தூண்டப்பெற்று நானும் எந்தக்கேள்வியும் அவனிடம் கேட்காமல் அவன் பின்னாலே சென்றேன். அவன் இப்போது குடிநீர் கிணறு இருக்கும் இடத்தில் நின்று காலால் ஒரு வட்டமிட்டுக் காட்டினான். நான் யோசித்துக் கொண்டே வட்டத்தைப் பார்த்தேன். திரும்பிப் பார்க்கையில் அந்த வாலிபன் மறைந்துவிட்டான்! மாதா தான் சம்மனசு ஒருவரை அனுப்பி தண்ணீர் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டியிருக்கிறார்கள் என்று நடந்தவற்றைக் கூறவே, மக்கள் புதிய தெம்புடன் கிணறு தோண்டினார்கள். தண்ணீரும் வந்தது. அதுமுதல் மக்கள் புதுமைத் தண்ணீர் என்றுதான் அதனை அழைத்தார்கள்" என்று கூறிமுடித்தார். நானும் ஆமாசுவாமி, கிணற்றில் தண்ணீர் சுரந்த ஓரிரு நாளில் எங்கள் அப்பா என்னைத் தோளில் வைத்துக் கொண்டு மணல் படிகள் வழியே கிணற்றுக்குள் இறங்கி தண்ணீர் மொண்டு, 'புதுமைத் தண்ணீர் குடி' என்று கொடுத்தார்கள். நல்ல ருசியாக இருந்தது என்று நானும் என் நினைவில் வந்ததைக் கூறி ஒத்துக் கொண்டேன். இந்நிகழ்ச்சியை ஏற்கெனவே சங். குருஸ் அந்தோனி சுவாமியவர்கள் காலத்தில் தினமலர் விளம்பரக் கட்டுரையிலும் எழுதியிருந்தேன், என்பது குறிப்பிடத்தக்கது".

கோவிலைச் சுற்றி பாதாளக் கோட்டை

இரண்டாவது அற்புதம் 1939–ம் ஆண்டு முதல் 1949 வரை நிகழ்ந்த ஒரு அசுரத்திட்டம்! அதையும் மாதாவே சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்களுக்கு ஏவுதல்மூலம் அறிவித்து வெற்றியுடன் முற்றுப் பெறச் செய்தார்கள்.

அந்த அசுரத்திட்டம் என்னவென்றால், மணல் மூடிய மாதா ஆலயத்தின் நான்கு பக்கத்திலும் மணல் தேரியை அகலமாகக் குடைந்தெடுத்து பாறைவரைக்கும் ஆழமாகத் தோண்டி, உறுதியான பெரிய சுவர்களால் வெளிக்கோவில் ஒன்றை எழுப்பி, அதன் மேல் மட்டம் மணல்தேரிக்குமேல் வந்ததும்

பழைய கோவிலை உள்ளே வைத்து அதற்குமேல் காங்கிரீட் கூரை அமைப்பது! பிறகு கீழ்க்கோவிலுக்கு இறங்கிச் செல்ல சுரங்கப்பாதைகள் அமைப்பது. இவ்வாறு கீழ்க்கோவிலை மீண்டும் மண்மூடிவிடாமல் நிரந்தரமாகக் காப்பாற்றுவது.

பிரமாண்டமான இத்திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும், எங்கிருந்து பணம் வரும் என்றெல்லாம் யோசித்திருந்தால் இத்திட்டம் ஒருநாளும் நிறைவேறியிருக்காது. சுவாமியவர்கள் மாதாவின்மேல் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

வடக்கன்குளம் அந்தோனிமுத்து மேஸ்திரியாரின் மேற்பார்வையில் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அயல்நாட்டு அல்லது மேற்றிராசன உதவிப்பணம் எதுவுமின்றி சொக்கன்குடியிருப்பு மக்களின் அபார உடல் உழைப்பு, பொருளுதவி (கட்டாய வரி), ஊக்கம், உற்சாகம் இவைகளை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, அம்மாபெரும் பாதாளக் கோட்டைச்சுவர் எழும்பிக் கொண்டிருந்தது. ஆலயத்தின் தென்புறமுள்ள உயர்ந்த தேரி மண் சரிந்து விழாதிருக்க 30 அடி உயரத்திற்கு பனைமரம், ஓலை, மட்டை, கட்டைகளால் தடுப்பு அமைப்பது வெகு சிரமமாக இருந்தது.

பக்தர்கள் உயிர் பிழைத்த புதுமை

ஒருநாள் மலையாளத்திலிருந்து வந்த திருமணமான தம்பதியர்கள் கோவிலுக்குள் சென்று மணல்மாதாவைத் தரிசித்துவிட்டு வெளியே வரும் போது அழகிய ஒரு மாது வாசலில் வந்து நின்று அவர்களைத் தடுத்து அப்படியே நிற்கும் படிச் சொல்லிவிட்டு மறைந்துவிட்டார்! அடுத்த வினாடியில் தேரிமண் தடுப்பை உடைத்துக் கொண்டு மலைபோல் மண் சரிந்து விழுந்தது! இவர்கள் வெளியே வந்திருந்தால் நிச்சயமாக மண்ணுக்குள் அகப்பட்டு இறந்திருப்பார்கள். இந்நிகழ்ச்சியை நேரில் கண்டதாக அங்கே கொத்தனாராக வேலை செய்து கொண்டிருந்த திரு. ராஜையா என்பவர் 30.4.2003 அன்று இந்நூல் ஆசிரியரிடம் சங். மார்டீன் சுவாமியவர்களின் முன்னிலையில் தெரிவித்தார்.

இதேபோன்று அநேக விபத்துக்களிலும் ஆபத்துக்களிலும் எவ்வித உயிர்ச்சேதமோ துரதிர்ஷ்டமோ நிகழாமல் கட்டிடவேலை ஆச்சரியமாக

முன்னேறிக் கொண்டிருந்ததென்றால், அது சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்களின் இடைவிடாத ஜெபமும் கரிசனையும்தான். அங்கே பனை ஓலையால் ஒரு குடிசை அமைத்து சுவாமியவர்கள் இரவும் பகலும் தங்கி வெயிலிலும் மழையிலும் வெகு துன்பப்பட்டு, எப்போதும் கையில் ஜெபமாலையோடு மாதாவை உருகி வேண்டியவாறே கட்டிட வேலைகளை முன்னின்று நடத்திவந்தார்கள். இது மாதாவின் திட்டம். எனவே மாதாவை நாடி அங்கு வந்த பக்தர்கள் வழங்கிய காணிக்கைகள் பெருகிக்கொண்டே இருந்தது. கட்டிடமும் உயர்ந்து தேரிமேட்டிலிருந்து 10 அடிக்கும் மேல் சென்றது.

அதன்பின் மேல்மட்டத்தில் காங்கிரீட் கூரை. அதன்மேல் மேற்கு ஓரத்தில் ஒரு மேல் கோவில் அத்தனையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் கச்சிதமாகக் கட்டி முடிக்கப்பட்டது.

திருயாத்திரீகர் தங்கும் விடுதி

பக்கத்து ஊர்களிலிருந்தும் தூரத்து ஊர்களிலிருந்தும் திரளாகவரும் பக்தர்கள் வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்குவதற்கும் சமையல் செய்து அசனம் கொடுப்பதற்கும் கண்டிப்பாக ஒரு சாவடிக் கட்டிடம் தேவைப்பட்டதை உணர்ந்த சுவாமியவர்கள் மாதாவிடம் வேண்டி அதற்குத் தேவையான பொருளுதவிகளை அற்புதமாகப் பெற்று கோவிலுக்கு வடக்குப் பக்கத்தில் திருயாத்திரீகர் தங்கும் மண்டபமும் சமையற்கூடமும் கட்டி முடித்தார்கள்.

இதற்கிடையில் சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் பலமுறை உணவு உறக்கமின்மையாலும், போதிய ஓய்வும் மருத்துவமும் பெறாததாலும் தளர்ந்து சுகவீனமடைந்து நலிவுற நேர்ந்தது. ஆயினும் ஒருவித ஆன்மீக பலத்தினால் புத்துணர்வு பெற்று கீழ்காணும் ஒரு முக்கிய அலுவலினிமித்தம் தொடர்ந்து உழைத்துவந்தார்கள்.

பாத்திமா யாத்திரைக் கன்னி மாதா

1950–ஆம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரிலிருந்து பாத்திமா யாத்திரைக் கன்னி மாதாவின் சுரூபம் தூத்துக்குடி மேற்றிராசனத்திற்குக்

கொண்டுவரப்பட்டது. அதனால் பாத்திமா செய்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்த சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் பாத்திமா மாதா சுரூபம் ஒன்றை போர்த்துகல் நாட்டிலிருந்து கொண்டுவரச் செய்து மணல்மாதா கோவிலின் மேல் கோவிலில் ஸ்தாபகம் செய்ய விரும்பினார்கள். பாத்திமாவில் மாதா வெளிப்படுத்திய "பரலோகத் திட்டம்" மணல்மாதா கோவிலில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் சுவாமியவர்களின் நோக்கம். அதாவது முதல் சனிக்கிழமை தோறும் மணல் மாதா கோவிலில் பாத்திமா மாதா விரும்பிய மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நிந்தைப் பரிகார பக்தி முயற்சி நடைபெற வேண்டும் என்பது.

இதற்காக, அவர் ஏற்கெனவே கட்டி முடித்த வெளிக் கோவிலின் மேல் உள்ள காங்கிரீட் கூரையின் மேற்கு ஓரத்தில் கட்டப்பட்ட கல்நார்க் கோவிலின் பீடத்தில் பாத்திமா மாதா சுரூபத்தை ஸ்தாபித்து 1950–ம் ஆண்டு திருவிழாவன்று அப்போது துணை மேற்றிராணியாராக இருந்த வந். தாமஸ் ஆண்டகை யவர்களைக் கொண்டு மந்திரித்து திறந்து வைத்தார்கள்.

1951–ல் வந். ரோச் ஆண்டகையவர்கள் சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்களைப் பற்றி கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது : "மணல்மாதா கோவில் ஒரு புராதனமான கோவில். மண்மூடி மறைந்திருந்த அக்கோவிலை எழுப்பி சிறப்பலங்காரமாகக் கட்டி முடித்து பரலோக மாதாவின் மகிமையை நாலாபக்கமும் பரவச் செய்தவர் சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்களே." (காண் : 200–வது ஆண்டு சிறப்பு மலர்)

அன்றுமுதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் சொக்கன்குடியிருப்பிலிருந்து மணல்மாதாகோவிலுக்கு மக்கள் எல்லாரும் சென்று திவ்ய பலிபூசையில் பங்கு பெறுவது வழக்கமாகிவிட்டது. அந்த நாட்களில் மின்சாரவசதி கிடைக்கவில்லையாதலால் மணல்மாதா திருவிழா செப்டம்பர் – அக்டோபர் மாதங்களில் வரும் பௌர்ணமி (முழுநிலா) நாளை ஒட்டியே ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது.

மாதாவினால் அவருக்குக் குறிக்கப்பட்ட அலுவல்கள் முடிந்ததும் சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் சுகவீனமுற்று இரண்டு மாதங்கள் வடக்கன்குளத்தருகிலுள்ள அமலிவனத்தில் சென்று ஒய்வெடுத்தார்கள். மீண்டும்

வந்து 3.10.1951 அன்று மணல்மாதா திருவிழா கொடியேற்றி சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள். ஏழாம் திருவிழாவன்று (10.10.1951) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு சுவாமியவர்கள் மயக்கமுற்று அவர்களுக்கு உதவியாக அருகிலிருந்த சங். அமலதாஸ் விக்டோரியா சுவாமியவர்களால் அவஸ்தை பூசுதல் பெற்று மணல் மாதா கோவிலிலேயே மரணமடைந்தார்கள். அப்போது சங். ஸ்டீபன்தாஸ் சுவாமியவர்களும் உடனிருந்தார்கள்.

சங். இஞ்ஞாசியார் சுவாமியவர்கள் ஆரம்பித்துவைத்த பொற்காலம் 1954 வரை சங். சேவியர் மெல் சுவாமியவர்களாலும் 1961 வரை சங். குருஸ் மரிய நாதர் சுவாமியவர்களாலும் 1964 வரை சங். அகுஸ்தீன் பர்னாந்து சுவாமியவர்களாலும் சுடர் விட்டு ஒளிர்ந்தது.

புதிய பொற்காலம்

1964–ல் சங். குருஸ் அந்தோனி சுவாமியவர்கள் சொக்கன்குடியிருப்புப் பங்குக் குருவாக நியமிக்கப்பட்டார்கள். இவர்களது அயராத உழைப்பினால் தான் நீண்ட காலமாக மின்னொளி இல்லாத வனாந்தரமாகிய இச்செந்தேரியின் மாதா கோவில் 10.6.1967–ல் மின் இணைப்பு பெற்று ஒளிபெற்றது. அதே ஆண்டில் திருயாத்திரீகர் தங்குவதற்கு வசதியாக பெரிய விடுதி கட்டப்பட்டது. குடிநீர் கிணற்றில் மின்பொறியால் தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் தண்ணீர் தொட்டியும் அமைக்கப்பட்டது. உள்கோவில் தளம் சமப்படுத்தப்பட்டு பளிங்குக்கல் பதித்து அழகு செய்யப்பட்டது. குறிப்பாக இதுவரை மணல்மாதா கோவிலுக்கு வாகனங்கள் செல்ல எவ்வித பாதையும் கிடையாது. சுவாமியவர்களின் பெரும் முயற்சியால் இன்று நாம் காணுகின்ற "பெரியதாழை மணல்மாதா சாலை", "தோப்புவிளை மணல்மாதா சாலை", "புத்தன் தருவை மணல்மாதா சாலை" ஆகியவை அமைக்கப்பட்டன. மேலும் மணல் மாதா கோவிலுக்கு வரும் குருக்கள் தங்குவதற்கு வசதியான குருக்கள் இல்லத்தைக் கட்டிய வரும் இவரே.

1972 முதல் 1978 வரை பங்குக் குருவாக இருந்த சங். மரியதாஸ் சுவாமியவர்கள் மணல்மாதா கோவிலின் மேற்கோவிலை முழுமையாகக் கட்டி ஆஸ்பெஸ்டாஸ் (கல்நார்) கூரை அமைத்து, கைபிடிச்சுவரும், கீழ் பக்கத்தில் மேலேறிச் செல்ல பெரிய படிக்கட்டுகளும் கட்டினார்கள்.

1978–ல் பங்குக்குருவாக வந்த சங். ஹெர்மஸ் மொடுதகம் சுவாமியவர்களால் வெகுகாலமாக சீர் செய்யப்படாத மாதா கோவிலின் எல்லைகள் சரி செய்யப்பட்டு வரையறுக்கப்பட்டன.

1983–ல் சங். சேவியர் சுவாமியவர்கள் பங்குப் பொறுப்பேற்றபோது முதன்முதலில் மணல்மாதா திருத்தல ஒலிச்சித்திரம் வானொலியில் ஒலிபரப்பப் பட்டது. கன்னியர்கள் தங்குவதற்கு தனி இல்லம் கட்டப்பட்டது. புத்தன் தருவை, வாலிவிளை சாலைகள் போடப்பட்டன.

1995–ல் சங். ஜான்போஸ்கோ சுவாமியவர்கள் பங்குக் குருவானபோது "மணம் தரும் மணல் மாதா" என்னும் மணல் மாதா திருத்தல வரலாற்றின் முதல் பதிப்பை வெளியிட்டார்கள். மணல்மாதா கோவிலில் புதிய கொடிமரம் நாட்டினார்கள்.

1997–ல் சங். அந்தோனிராபர்ட் சுவாமியவர்களால் கோவிலுக்குத் தென்புறமுள்ள பயணிகள் மண்டபம் கட்டப்பட்டது.

1999–ம் ஆண்டு மணல் மாதா கோவில் கண்டெடுக்கப்பட்டதின் 200–வது ஆண்டு! அப்போது பங்குக்குருவாக வந்த சங். மார்டின் மனுவேல் சுவாமியவர்கள், நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பல முன்னேற்றத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள். மேல் கோவில் முகப்பு மண்டபம், மணல்மாதா சரித்திர சித்திரங்கள், மேல் கோவில் பீடம், கீழ்கோவில் முகப்பிலுள்ள புதுமைச் சிலுவையைத் தரிசிக்கச் செல்லும் படிக்கட்டுகள், கீழ்க்கோவில் பீடம் ஆகியவற்றை அழகுற அமைத்தார்கள். மேலும் ஆலய நுழைவுத் தோரணவாயில், உயர்ரக திருயாத்திரீகர் தங்கும் M.G.M இல்லம், திறந்த வெளிக் கலையரங்கம், அசனமடம் முதலியவற்றை சிறப்பாகக் கட்டினார்கள். இத்துடன் ஆலயத்தில் வெகு சிறப்பான முறையில் ஒலி, ஒளி அமைத்து, அதற்கென ஆலய ஜெனரேட்டரையும் நிறுவினார்கள். கல்வாரிக் கெபி அமைத்து, மணல்மாதா பக்திமுயற்சிகளை சிறப்பாக நடத்தி வந்தார்கள். அவர்களின் இறுதி முயற்சியாகவே இத்திருத்தல வரலாறு திருத்திய பதிப்பு வெளியிடப்படுகிறது.

மணல்மாதா திருத்தலத்தில் செய்யப்பட்டுள்ள முன்னேற்றங்கள் அனைத்தும் குருக்களால் மட்டுமன்றி சொக்கன்குடியிருப்பு மக்களால், குறிப்பாக அவ்வூரிலிருந்து வெளியிடங்களில் வர்த்தகம்/ தொழில் செய்பவர்களின் உதவியாலும் ஒத்துழைப்பாலும் செய்துமுடிக்கப்பட்டவை என்பதை நன்றியுடன் நினைவு கூர்வோம்.

7

மணல் மாதாவின் அற்புதங்கள்

(1) காணிக்கைப் பெட்டித் திருடன் பிடிபட்ட அற்புதம்

12.4.1943 அன்று பக்தர் ஒருவர் ரூபாய் ஒன்றை காணிக்கைப் பெட்டியில் போடச் சென்றார். ஆனால் உண்டியலில் துவாரம் இல்லாதது கண்டு அதிசயித்தார். 'ஓரணா, இரண்டணா என்றால் பெட்டியின் மேல் பகுதியில் வைத்திருப்பேன். இது ஒரு ரூபாய் என்பதால் உங்களிடம் கொடுக்கின்றேன்' என்று அதற்கான விவரங்களையும் கூறி ஆலயத்தில் தண்டல் வேலை செய்து வந்த சவரியப்பன் என்பவரிடம் கொடுத்தார் அவர். ஆலயத்தில் தற்போதுள்ள உண்டியல் பெட்டி புதிதாக வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்த தண்டல்காரர், அந்தோணி லாசர் என்ற 14 வயது கொண்ட தன் மகனை அழைத்து பங்குசுவாமிக்கு விவரங்களைச் சொல்லுமாறு அனுப்பி வைத்து அவர் தம் தொழிலுக்குச் சென்றார். சிறுவன் அந்தோணிலாசர் பங்குக்குரு சங். இஞ்ஞாசியாரிடம் தெரிவிக்க சொக்கன்குடியிருப்புக்குச் சென்றான்.

சிறுவனின் கூற்று பங்கு சுவாமியவர்களுக்கு ஒரு பேரதிசயமாக தோன்றியது. திருடன் அனைத்தையும் திட்டமிட்டே செய்துள்ளான். வழக்கமாக சனிக்கிழமைகளில்தான் மக்கள் ஆலயத்திற்கு வருவார்கள். ஞாயிறு காலையில் செல்வார்கள். திருடன் திங்கள் கிழமை வந்துள்ளான். மக்கள் உடனே சந்தேகித்துவிடக்கூடாது என்பதற்காக புதுப்பெட்டி ஒன்றை தயாரித்துள்ளான். ஆனால் அங்கே அவனது மூளையைக் குழப்பி விட்டார்கள் மாதா. காணிக்கை போட துவாரம் அமைக்கும் எண்ணம் அவனுக்கு கொடுக்கப்படவில்லை. காணிக்கை போடுபவர்களும் அணா, துட்டு என்றுதான் போடுவார்கள். ஆனால் அற்புதமாக பெட்டி களவு போன சமயத்தில் ஒருவர் ஒரு வெள்ளி ருபாயை காணிக்கையாக செலுத்த வந்திருக்கின்றார் என்றால்? ..... துவாரம் இருந்திருக்குமானால் காணிக்கையை பெட்டியில் போட்டு விட்டுச் சென்றிருப்பார்.

பங்கு சுவாமி உபதேசியாரையும் மற்றும் ஊர்ப் பெரியவரான சந்தன நாடார், புதுமை சவரிமுத்து நாடார், ராயப்ப நாடார் ஆகியோரையும் அழைத்து கணக்கன்குடியிருப்பு பரலோக மாதா ஆலயத்திற்கு சென்று யார் யார் சமீபத்தில்

வந்துள்ளார்கள் என்று விசாரித்து வரச் சொன்னார். மேலும் ஒரு சிறிய குறிப்பையும் அவர்களுக்கு சொன்னார்.

அப்போது உவரி பங்கைச் சார்ந்த கூட்டப்பனை ஊர் வாசியாகிய தோமாஸ் என்பவரின் மகன் பவுல் குருஸ் மாதா கோவிலில் நேர்ச்சையாக 40 நாட்கள் தபசுக்கு தன் குடும்பத்துடன் வந்திருந்தான். அவ்விதம் சில நாட்கள் தங்கியபின் ஒரு நாள் அதாவது 10.4.1943ல் தன் ஊர் போய் கொண்டு வந்த பெட்டியை காண்பித்து அங்கு கூடியிருந்தவர்களிடம் கூறிய சமாச்சாரத்தைச் சொல்லிவிட்டு அன்றிரவு தன்னுடன் கோயில் சாவடியில் படுத்து உறங்கியதையும் கூறினார். இந்த நபரின் நடத்தை தனக்கு ஆரம்பத்திலிருந்தே அதிருப்தியைத் தருவதாக இருப்பதால் அவன் அங்கு இருக்கிறானா? இல்லையா? என்பதையும் கவனித்து வாருங்கள் என்றார்.

அதிசய மணல்மாதா திருத்தலத்திற்கு நேர்ச்சையை முன்னிட்டு தபசுக்காக வரும் திருப்பயணிகள் பங்குசுவாமியார் வாரந்தோறும் பூசைக்கு வருகின்றபோது பாவசங்கீர்த்தனம் செய்து நற்கருணை உட்கொள்வது வழக்கம். பவுல் குருஸ் மணல்மாதா கோவிலில் தங்கியிருந்த காலங்களில் மிகப் பரிசுத்தமான மனிதனாக நடித்துக் கொண்டான். ஆனால் பங்குசுவாமியார் பூசைக்கு வருகை தந்தபோது பவுல் குருசும் அவரது மனைவியும் பாவசங்கீர்த் தனம் செய்து நன்மை வாங்குவதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

மேலும் பங்கு சுவாமியார் திருத்தலத்திற்கு வந்தபோதெல்லாம் அது சரியில்லை இது சரியில்லை என்று சதா முறையீடுகள் செய்வதே பவுல் குருசுவிற்கு வழக்கமாக இருந்தது. இவ்விதம் குறை கண்டுபிடிப்பதே தொழிலாகக் கொண்ட அவனிடம் பங்கு சுவாமியார் அன்புடன், "எல்லாம் சரியாக நடைபெறும். இவற்றைப்பற்றி பேசுவது உன் வேலையாக இருக்கக் கூடாது. உன் காரியத்தை மட்டும் கவனி" என்பார்கள். சுவாமி அவர்களின் பதில் அம்மனிதருக்கு மேலும் வெறுப்பூட்டியது. எனவே அவன் இன்னும் ஆங்காரத்துடன் நடந்து கொண்டான்.

விசாரணைக்காக சென்ற நால்வரும் ஆலய வேலைகளைக் கவனிக்கும் சவரியப்பன் என்பவரிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். 12.4.1943ல் பவுல் குருஸ் என்பவர் தன் குடும்பத்தை அதிகாலையிலேயே ஊருக்கு அனுப்பி விட்டார். முந்தியநாள் தன்னோடு கொண்டு வந்த தகரப்பெட்டியை கோயில் சாவடியில் படுத்திருந்தபோது தன்னோடு அவர் வைத்திருந்தார். அதிகாலை மூன்று

மணிக்கு எழுந்து வழக்கம்போல ஆலயத்தைப் பூட்டிவிட்டு தன் குடிசைக்குச் சென்றார் சவரியப்பன். குடிசையின் முன் பகுதியில் உள்ள ஒரு கம்பில் தொங்கிய ஓர் ஓலைப் பெட்டியில் ஆலயத் திறவுகோலை போட்டுவிட்டு தனது தொழிலுக்கான தளவாடங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். புறப்படும் வேளையில் பவுல் குருஸ் சுருட்டுக்கு நெருப்பேற்ற அடுப்பில் நெருப்பு இருக்கின்றதா? என்று கேட்டிருக்கின்றார். இந்நேரத்தில் நெருப்பு இருக்காது என்று கூறித் தன் தொழிலுக்குச் சென்று விட்டார் சவரியப்பன்.

அவர் தொழிலுக்குச் சென்றபின் பவுல் குருஸ் ஆலயத்திறவுகோலைக் குடிசையிலிருந்து எடுத்து வந்து ஆலயத்தைத் திறந்து வந்து காணிக்கைப் பெட்டியை எடுத்துள்ளார் என்பதும் அந்த இடத்தில் ஒரு போலிப் பெட்டியை வைத்திருக்கின்றார் என்பதும் காணிக்கைப் பெட்டியைத் தனது தகரப் பெட்டிக்குள் ஆடாது அசையாது பத்திரமாக வைத்துக் கொண்டார் என்பதும் சாவியை ஒரு பக்கமாக வீசிவிட்டார் என்பதும் அந்த நான்குபேருக்கும் வெளிப்படையானது.

சந்தேகத்திற்கு உரியவன் பவுல் குருஸ் என்பதை அறிந்த பங்கு சுவாமியார் இஞ்ஞாசியார் அந்நால்வரையும் உவரிக்கு அனுப்பி அங்கு பங்குசுவாமியாராயிருந்த சங். ரோசாரியோ கொரையரா சுவாமியவர்களிடம் அவனைப் பற்றிய விவரங்களை அறிந்துவர அனுப்பினார்.

சங். ரோசாரியோ கொரையரா சுவாமியவர்கள் சந்தன நாடாரோடு இருவரை கூட்டப்பனைக்கு அனுப்பி பவுல் குருசைப் பற்றி விசாரித்து வர அனுப்பினார். அவர்கள் பவுல் குருசை காணாமல் திரும்பியபோது திசையன்விளை காவல் நிலையத்தில் திருடன் ஒருவன் அடைபட்டிருப்பதாக செய்தி கிடைத்தது. அன்றிரவை உவரியில் கழித்து விட்டு 14.4.1943 காலை 7 மணிக்கு நால்வரும் திசையன்விளை போய்ச் சேர்ந்தனர். திசையன்விளை பிரபல தமிழ் வைத்தியரான மை.லாசர் நாடாரை தங்களுடன் அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனை அடைந்தனர்.

அவ்விதம் சென்றவர்கள் மாதாகோயிலில் வைக்கப்பட்டிருந்த காணிக்கைப் பெட்டி அங்கு எழுதிக் கொண்டிருந்த குமாஸ்தாவின் மேஜை மேல் இருப்பதைக் கண்டு அதிசயித்தனர். காணிக்கைப் பெட்டி இங்கு வரக் காரணமாக இருந்த பவுல் குருசை போலீஸ் காண்பித்த போது பவுல் குருசைப் பற்றிய

விவரங்களை அந்நால்வரும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். வாதியில்லாமலே திருடன் அகப்பட்டுக் கொண்டது உங்கள் மாதாவின் பெரிதான புதுமையே என்றுரைத்தார் சப் இன்ஸ்பெக்டர்.

திருடன் பிடிபட்ட விதம்

காணிக்கைப் பெட்டி களவு போன மறுநாள் மாலை திருநெல்வேலியிலிருந்து திசையன்விளைக்கு சென்ற பேருந்திலிருந்து மன்னார்புரம் விலக்கில் அணைக்கரை கோயில் விசாரணை உபதேசியாரான இரத்தினசாமி பிள்ளை அவர்களும் இரம்மதபுரம் கோயில் உபதேசியாரான சேவியர் மதுரேந்திர நாடாரும் இறங்கியுள்ளனர். அப்போது ஒருவர் பதட்டத்துடன் பேருந்தில் ஏறினார். அவ்விதம் ஏறியவரிடம் பேருந்தில் பயணம் செய்த ஒருவர் அருகில் காணப்பட்ட கிணற்றைக் காட்டி அதிலுள்ள தண்ணீரை குடிக்கலாமா என்று வினவினார்? தண்ணீர் கலங்கியிருக்கிறது என்று பதிலுரைத்தார்.

கிணற்றருகில் நின்று கொண்டிருந்த 12 வயது கொண்ட தாசன் என்ற சிறுவன் இந்த கிணற்றுக்குள் ஒரு மரப் பெட்டி கிடக்கிறது என்று கூச்சலிட்டான். பேருந்திலிருந்து இறங்கிய இரத்தினசாமி பிள்ளையும் சேவியர் மதுரேந்திரம் உபதேசியாரும் கிணற்றினுள் பார்த்தனர். இது ஒரு கிறிஸ்தவ கோயில் காணிக்கைப் பெட்டி என்று அவர்கள் சொன்னதும் பேருந்திலிருந்து எல்லோரும் இறங்கி பார்த்தனர்.

காணிக்கைப் பெட்டியை வெளியே எடுத்து வைத்ததும், "கோயில் காணிக்கைப் பெட்டி கிணற்றுக்குள் எப்படி வந்தது" என்ற வினா அனைவரிடமும் எழுந்தது. முதல் ஆராய்ச்சியாக விலக்கிலிருந்து பேருந்தில் ஏறியவர் யார் என்றனர் சிலர். அவன் தான் என்று பதட்டத்துடன் ஏறிய பவுல்குருசைச் சுட்டிக் காட்டினர். "நான் சங்கனாங்குளத்திலிருந்தே வருகின்றேன். எனக்கு இந்த பெட்டியைப் பற்றி ஒன்றும் தெரியாது" என்றார் பவுல் குருஸ். "சிறிது நேரத்திற்குமுன் இவர்தான் இந்தப் பெட்டியைக் கிணற்றுக்குள் போட்டார்" என்றான் தாசன் என்ற சிறுவன். நானில்லை என்று கூறிக் கொண்டே பவுல் குருஸ் பேருந்திலிருந்து இறங்கி வேகமாக நடந்து கொண்டிருந்தான். உபதேசியார் இருவரும் அவனைச் சோதிக்க வேண்டும், விடக்கூடாது என்றும் கூறிக் கொண்டே அவனைப் பிடிக்க முற்பட்டனர்.

இந்நேரத்தில் திசையன்விளையிலிருந்து நாங்குநேரி செல்லும் பேருந்து வந்து நிற்க அதிலிருந்து திசையன்விளை ஹெட்கான்ஸ்டபிள் இறங்கினார். அவனைப் பரிசோதித்துப் பார்த்தபோது செம்பு நாணயங்களும், ரூபாய்களும், அணா நாணயங்களும் அவரிடம் இருந்தன. கலக்கமுற்று பயத்தினால் நடுங்கிய பவுல் குருஸ் உண்மையில் திருடன்தான் என்றுகண்டு கொண்ட ஹெட்கான்ஸ்டபிள் அவனது கரங்களைக் கட்டி வாகனத்தில் ஏற்றி திசையன்விளை காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றார். இவ்விதம் திசையன்விளை காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த போதுதான் சொக்கன்குடியிருப்பிலிருந்து நான்கு பேரும் வந்திருந்தனர்.

களவு நடந்த பகுதி குலசேகரப்பட்டணம் சரகத்தைச் சேர்ந்தது. குலசேகரப்பட்டணம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் 21.4.1943ல் சார்ஜ் சீட் போட்டு திருச்செந்தூர் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு அனுப்பி வைத்தார். வழக்கு விசாரணை முறையே 18.5.43லும் 29.5.43லும் நடந்தது. திருச்செந்தூரில் விசாரணை செய்த இன்சார்ஜ் சப் மாஜிஸ்திரேட் N.R வெங்கடாச்சலம் அவர்கள் 31.5.43ல் முதன் முறையாக பவுல் குருஸ் குற்றவாளியாக நிற்பதாலும், தான் செய்த குற்றத்திற்காக மனவருத்தம் தெரிவித்ததாலும் இரண்டு மாதங்கள் மட்டும் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பிட்டுள்ளார்.

(2) மாதா கிரீடம் மறைவும் கண்டுபிடிப்பும்

அன்று 1950ம் வருடம், டிசம்பர் மாதம், 23ம் தேதி சனிக்கிழமை காலை வேளையில் திருயாத்திரீகர் மணல் மாதா திருத்தல வளாகத்தை நிரப்பிக் கொண்டிருந்தனர். சுமார் எட்டுமணியளவில் ஆலயத்தின் அருகிலுள்ள கூடத்தில் காலை உணவு தயாரிப்பதில் அவர்கள் ஈடுபட்டனர். அவ்வேளையில் தற்செயலாக ஆலயத்திற்குள் சென்ற கோயில் கூட்டி என்னும் ஆலய ஊழியர் மாதாவின் தலையில் சூடப்பட்டிருந்த கிரீடத்தைக் காணாமல் திகைத்தார்.

கத்தோலிக்கரும், பிறமதத்தவருமாக அங்கு கூடியிருந்த மக்கள் மாதாவுக்குச் செய்யப்பட்டுள்ள தீங்கினைக் கண்டு வெகுண்டனர். நாலா பக்கமும் சென்று தேடினர். ஆலயத்தில் பிச்சை எடுத்து வயிற்றுப்பாட்டைக் கழித்து வந்த சிலுவைக் கண் மீது சிலருக்குச் சந்தேகம் வந்தது. அவர்கள் ஆலயத்திலிருந்து புதிதாக வெளியே சென்ற கால் தடம் வழியாகச் சென்றனர். செட்டிவிளை,

தோப்புவிளை, குட்டம் வழியாகச் சென்ற கால் தடம் அடர்ந்த காட்டிற்குச் சென்று குடை போன்றிருந்த உடை மரத்தின் கீழ் விரிந்து படர்ந்திருந்த கற்றாழைகளை அடைந்திருந்தது.

அக்கற்றாழைகளுக்கு இடையில் உடலைச் சக்கரமாகச் சுருக்கிப் படுத்திருந்த சிலுவைக்கண் காணப்பட்டார். மாதாவின் கிரீடமும் உருவிழந்த நிலையில் இருந்தது. தேடி வந்தவர்கள் அவரைப் பிடித்து கரங்களைப் பிணைத்து பங்குசுவாமி சங். இஞ்ஞாசியாரிடம் கொண்டு சென்றனர். வடக்கன் குளத்தைச் சார்ந்த ஒரு கத்தோலிக்கரான அவர் தனது மனவருத்தத்தை நடுக்கத்துடன் தெரிவித்த காரணத்தால் அவரை மன்னித்துவிட்டு பரிகாரமாக நூறு தோப்புக் கரணம் போடச் சொல்லி அனுப்பினார்கள் சுவாமியவர்கள்.

(3) புதுமைத் தண்ணீரில் விளக்கு எரிந்தது

நோயால் அழுந்திய பெண்ணொருத்தி நோய் தீர்க்கும் படி மன்றாடி அதிசய மணல் மாதாவின் திருத்தலத்திற்கு வந்திருந்தாள். மாதாவிடம் உருக்கமாக மன்றாடிய அப்பெண்ணிற்கு மணல் மாதா காட்சியளித்து, "ஆலயத்தில் நாற்பது நாட்களுக்கு விளக்கேற்றி வை" எனக் கூறியிருக்கின்றார்கள். அப்பெண், "தாயே! நானோ ஏழை விளக்கேற்ற எண்ணெய்க்கு எங்கு செல்வேன்" என்று பதிலளித்துள்ளாள். "எனக்கு என் புதுமைக் கிணற்று நீரைக் கொண்டு வந்து விளக்கேற்று" என்று கூறி மாதா மறைந்திருக்கின்றார்கள்.

அந்த ஏழை பனைமரத்து புதுஓலையில் ஒரு பட்டை செய்து புதுமைத் தண்ணீரை அப்பட்டையில் கொண்டு வந்தாள். கொண்டு வந்த தண்ணீரை விளக்கில் ஊற்றி நெருப்பைப் பற்ற வைத்த போது அது சுடர்விட்டு ஒளிர்ந்தது. இது அனைவருக்கும் ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. விளக்கு ஒளிர்ந்தது போன்று அப்பெண்ணின் வாழ்க்கையும் ஒளிரத் தொடங்கியது.

(4) முகமதியப் பெண்மணியைப் பாதுகாத்த மணல்மாதா

குலசேகரப்பட்டணத்திலுள்ள ஒரு முகமதியப் பெண் வீணாக தப்பெண்ணங்களை வளர்த்து கசப்புணர்வுகளைப் பெருக்கிய தன் கணவர் வீட்டிலிருந்து புத்தன் தருவையிலுள்ள தன் தாயார் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றாள். கழுத்தில் தங்க நகைகள் அதிகமாக இருந்தன. நகைகளைக் கண்ட

இரு திருடர்கள் அவற்றைக் கைப்பற்றும் எண்ணத்துடன் அப்பெண்ணை விரட்டினர். அந்தப் பெண் விரைந்து ஓடி மணல் மாதா ஆலயத்தின் வாசலில் நின்று கொண்டு, "அம்மா, அம்மா" என்று கூவி கதவுகளைத் தட்டினாள். அப்போது தாழிடப்பட்டிருந்தக் கதவுகள் அற்புதமாகத் திறந்தன. அப்பெண் ஆலயத்திற்குள் நுழைந்ததும் மீண்டும் கதவுகள் தாமாக மூடிக் கொண்டன. அவளை விரட்டி வந்த திருடர்கள் பெண்ணின் காலடித்தடங்களைத் தேடினர். சுற்றும் முற்றும் தேடினர். பார்வையில் அவள் சிக்காதிருந்ததால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மணல் மாதா அப்பெண்ணின் கணவரின் கனவில் தோன்றி அவளுக்கு நடந்ததைக் கூறினார்கள். உடனே கணவர் தன் குடும்பத்தாருடன் அன்னையின் ஆலயம் வந்தடைந்தார். தன் மனைவியைக் காத்த மாதாவுக்கு நன்றி தெரிவித்து அவளைத் தன்னில்லம் அழைத்துச் சென்றார். ஜாதி மத பேதமின்றி அனைவருக்கும் அன்னையாக மணல் மாதா செம்மணல் குன்றில் வீற்றிருக்கின்றார்கள் என்பதற்கு இது ஒரு சான்று.

(5) முடமான குழந்தை குணமான புதுமை

மணல்மாதாவின் பக்தர்களே!

மாதாவின் அருட்கொடையினால் சிறப்புடன் வாழும் ஒரு கத்தோலிக்க ஏழைக்குடும்பம் எங்கள் குடும்பம். மிகக் குறைந்த வருவாயில் 8 குழந்தைகளுடன் வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்த எங்களுக்கு 1966–ம் ஆண்டு 9–வது ஒரு பெண்குழந்தை முடமாகப் பிறந்தது. இரண்டுமுழங்கால்களும் பின்னோக்கி வளைவதற்குப் பதிலாக முன்னோக்கி வளையும். இரண்டு கால்களையும் தோள்களில் தூக்கிப் போட்டுக் கொள்ளும். வறுமையில் உழன்று கொண்டிருந்த எங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு தாங்கமுடியாத பாரச்சிலுவையைச் சுமக்கும்படி கடவுள் தந்துள்ளதை எண்ணி அங்கலாய்ப்புடன் மருத்துவர்களை நாடியபோது பிறவியிலேற்பட்ட முடத்தை மாற்றமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிடவே எங்களுடைய வேதனைகளை, துயரத்தை ஆண்டவரிடமே ஒப்புவித்தோம். அக்காலகட்டத்தில் (1966–ம் ஆண்டில்) ஒரு மரவள்ளிக் கிழங்கு வியாபாரி (மிதி வண்டியில் கொண்டு வந்து விற்பவர்) எங்கள் வீட்டிற்கு அருகில் வைத்து வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தார். அவரிடமிருந்து மணல் மாதா திருவிழா அறிக்கை அச்சடிக்கப்பட்ட தாள் கிடைக்கப்பெற்று அவ்வாண்டு அக்குழந்தையைக்

கொண்டு திருவிழா நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து மணல் மாதாவின் அடைக்கலத்தில் தானே ஒப்புவித்து, மணல்மாதா எப்படியும் நம் குழந்தை மீது கருணை கொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் வீடு சென்றோம். மிக குறுகிய காலத்தில் குழந்தை யாரும் அறியா நிலையில் தவழ்ந்தது. இன்னும் குறுகிய காலத்திற்குள் கண்ணுறுவோர் வியக்குமாறு யாதொரு பழுதுமின்றி செவ்வனே குழந்தை நடந்து ஓடி விளையாடியது. அக்குழந்தை தற்போது திருமணமாகி கணவன் குழந்தையுடன் நாசிக்கில் (Nasik) வசித்துக் கொண்டிருக்கிறாள். (தனது குழந்தைக்கு மணல்மேரி என்று பெயர் சூட்டியுள்ளார்.)

இவ்விதமாக மாதா எங்கள் குடும்பத்திற்குக் காட்டிய அளவிட முடியாத அருளை, அன்பை எண்ணி பூரிப்பு கொண்டு அவர்களது துதிபாடியதோடு, அன்றிலிருந்து ஆண்டுதோறும் எப்படிப் பட்ட சூழ்நிலையிலும் மாதாவின் திருவிழா காணத் தவறுவதில்லை. மாதா காட்டிய கருணையை அச்சடித்து விளம் பரப் படுத்த தவறி விட்ட எங்களுக்கு நித்திரையில் தோன்றி அறிகுறி காட்டியமை யால் குறிப்பிட்ட காலத்தில் செய்யத் தவறியமைக்கு மாதாவிடம் மன்னிப்புக் கேட்டு இதோ இன்று உங்கள் மத்தியில் மாதாவின் மகிமையைக் கூறி நிற்கிறோம்.

மாதாவின் பக்தர்களே!

"மாதாவின் பக்தியைப் பரப்புங்கள்
புதுமைகள் என்னவென்று அறிவீர்கள்" என்ற
புனித ஜான்போஸ்கோவின் அருள்வாக்கு நம் உள்ளங்களில் பதிந்திருக்கட்டும்.
மாதாவை நம்பினோர் கைவிடப்படார்.

இவண்

திரு. திருமதி. பெர்க்மான்ஸ் பர்ணாண்டோ,

கூத்தென்குழி.

(6) அற்புதத்தின் அணையா ஜோதி

எங்கள் சொந்த ஊர் உவரி, எங்கள் குடும்பத்தினர் மாதத்தின் முதல் சனிக்கிழமை தவறாமல் மணல்மாதா ஆலயத்திற்கு சென்று வருகிறோம்.

எங்கள் இரண்டாவது மகன் ரஜிங்டன் 7 வயதில் இளைப்பு நோயால் மிகவும் அவதிப்பட்டான். செல்லாத மருத்துவமனை இல்லை, நாடாத மருத்துவர்

இல்லை, எனினும் குணமாவதற்கான எவ்வித அறிகுறியும் தென்படவில்லை. இறுதியில் மாதாவிடம் மன்றாடினோம், எங்களின் மன்றாட்டை மாதா கனிவுடன் ஏற்றுக் கொண்டார்கள். அரிய பெரிய மருத்துவர்களால் பல வருடங்கள் போராடி குணமாக்க முடியாத இளைப்பு நோயைக் குணமாக்கும்படி மணல் மாதாவிடம் வேண்டினோம். உடனே குணமாக்கினார்கள்.

நாட்கள் பல சென்றன ... அதே மகனுக்கு மீண்டும் வலது காலில், கால் ஆணி இருந்தது, அதனால் நடக்கமுடியாமல் மிகவும் வேதனைப்பட்டான் மீண்டும் ஒரு வெள்ளிக்கிழமை அன்று மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவர்கள் சோதித்து விட்டு சிறு அறுவை சிகிச்சை செய்தால் பூரண குணமாகிவிடும் ஞாயிற்றுக்கிழமை அறுவை சிகிச்சையை வைத்துக் கொள்ளலாம் என்றார்கள். மறுநாள் சனிக்கிழமை, நாங்கள் வழக்கம் போல் குடும்பத்துடன் மணல் மேரி மாதாவை தரிசிக்கப் புறப்பட்டோம். எங்கள் மகனும் உடன் வர விரும்பினான். அவனால் நெடுந்தொலைவு நடக்கமுடியாது எனத் தெரிந்தும் அவன் விருப்பத்திற்கேற்ப அவனையும் உடன் அழைத்து வந்தோம். மாதாவைத் தரிசித்தோம், எங்களுள் புது ஒளி பரவியது, எங்களது மகன் உற்சாகத்துடன் காணப்பட்டான், மறுநாள் அறுவை சிகிச்சை என்பதால் வேகமாக புறப்பட்டோம். இல்லம் வந்து அடைவதற்குள் என் மகனின்காலில் இருந்த ஆணி இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. மாதாவின் அன்பை எண்ணி வியந்தோம். இப்படியாக மாதா எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் இன்னல்களில் இருந்து காப்பாற்றி பல உதவிகள் புரிந்து அன்றும் இன்றும் எங்களைக் காப்பாற்று கின்றார்கள். அந்த மாதாவுக்கு நாங்கள் என்றென்றும் நன்றிகள் கூற கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாதாவின் பிள்ளைகள்

V.S. *அந்தோனி மிக்கேல் - பாத்திமா,*

உவரி.

(7) கருணையின் வடிவே கன்னிமரிமாதா

இலங்கையில் களுத்துரைகலமுல்லை என்ற இடத்தில் 27.7.1955 அன்று 40 அடி உயரத்திலிருந்து தவறி கீழே விழுந்து விட்டேன். கீழே விழும் பொழுது நான் மாதாவே என்று அலறினேன். என் அலறல் கேட்டு ஒரு சிங்களத்தாய் அலறல்

வந்த திசையை நோக்கி மேலே பார்த்தார்கள். அவர்கள் பார்க்கவும் அவர்களுக்கு முன்பாக நான் கீழே விழவும் அவர்கள் என்னை அரவணைத்துக்கொண்டார்கள். கீழே விழுந்த அதிர்வில் எனது துடை எலும்பு இரண்டாக முறிந்தது, என்னை மருத்துவமனையில் சேர்த்தார்கள், அங்கு 4 மாதமாக சிகிச்சை பெற்றேன். இருப்பினும் என்னால் முன்புபோல் நடக்கமுடியவில்லை, நடப்பதற்கு ஊன்றுகோல் தேவைப்பட்டது. மருத்துவமனையில் ஊன்றுகோல் இல்லாமல் நடக்கக்கூடாது எனக்கூறி இரண்டு ஊன்றுகோலுடன் டிஸ்சார்ஜ் செய்தார்கள்.

நான் நடக்கமுடியாத இந்த சூழ்நிலையில் டிஸ்சார்ஜ் செய்து அதுவும் ஊன்றுகோலுடன் நடக்கச் சொல்கின்றார்களே என்ற மனவேதனையில் துடித்தேன். இனி நமக்கேது வாழ்வு அதுவும் நொண்டியாக இருக்கவேண்டுமே என புலம்பினேன். அன்று இரவு உறக்கம் வராமல் தவித்தேன். நெடு நேரத்திற்குபின் கண்ணயர்ந்தேன். என் கனவில் மணல்மாதா தோன்றி நீ எதற்கும் கவலைப் படாதே என்று சொல்லி எனக்கு டாக்டர்கள் கொடுத்த ஊன்றுகோலைத் தூக்கி எறிந்து விட்டார்கள். நான் கனவு கலைந்து எழுந்து ஊன்றுகோல் துணையில்லாமலே நடந்தேன். என்னைப் பார்ப்பவர்கள் கால் முறிந்தவன் என்று சொல்லமுடியாத அளவிற்கு நடந்தேன். அற்புத மணல்மாதாவை நம்பினோர்கள் ஒருபோதும் கைவிடப்படமாட்டார்கள். இன்றும் என் குடும்பத்தில் பல அற்புதங்கள் செய்கிறார்கள். மணல்மாதாவுக்கு எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- தொ.மா. செல்லையா நாடார்,
சொக்கன்குடியிருப்பு.

(8) மண்ணெண்ணெய் ஒழுக்கு நின்றது; மாதா விளக்கு எரிந்தது

1964ஆம் ஆண்டு. அன்று ஞாயிற்றுக்கிழமை, நள்ளிரவு நேரம். கையில் ஒரு டின்னுடன் ஒரு பெண்மணி தோன்றினார். நீர் யார்? டின் கொண்டு வந்திருப்பது ஏன்? என்று கேட்டேன். என் ஆலயத்தில் தீபமில்லை. அதனால் கொண்டுவந்தேன் என்று கூறி அந்தப்பெண் மறைந்துவிட்டார். நான் உடனே விழித்துக் கொண்டேன். கனவில் தோன்றியது மணல்மாதா தான் என்றும், மாதா ஆலயத்தில் எண்ணெய் இல்லை என்றும் நிச்சயித்துக் கொண்டேன். இரு தினங்கள் கழித்து அதாவது புதன்கிழமை உடன்குடியில் ஒரு டின்

மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு நானும், திரு. மனுவேல் நாடாரும், அவர் வீட்டு வேலைக்காரப் பெண்மணியும் பஸ் மூலம் சொக்கன்குடியிருப்பு வந்து விலக்கில் இறங்கினோம். அப்பெண் எண்ணெய் டின்னை சுமந்து கொண்டு எங்களோடு வந்தாள். உசரத்துக்குடியிருப்பைக் கடந்தபின் டின் உடைந்து எண்ணெய் ஒழுகுகிறது. என் சேலையெல்லாம் நனைகிறது என்று அப்பெண் மணி கூறினாள். உடனே டின்னை கீழே இறக்கினோம். அந்த டின்னில் ஒரு நெரிசல் இருப்பதாகத் தெரிந்தது. அதிலிருந்து எண்ணெய் ஒழுகிக் கொண்டிருந்தது. மாதாவே இந்த டின்னை எண்ணெயோடு கொண்டு சேர்த்தாலும், அது வெறும் டின்னாக ஆகிவிட்டாலும் அது உமக்குதான். இனிமேல் எண்ணெய் ஒழுகாதபடி அதைக் காக்க உமக்கு வல்லமை உண்டு. என்று சொல்லிக்கொண்டு கொஞ்சம் மண்ணை அள்ளி ஒழுகிய இடத்தில் போட்டேன். உடனே எண்ணெய் ஒழுகுவது முற்றிலும் நின்றுவிட்டது. மீண்டும் டின்னை அப் பெண் சுமந்து வந்தாள். ஆலயத்தை அடைந்ததும் எண்ணெய் குறையாமல் இருப் பதைக் கண்டு ஆச்சரியமடைந்தோம். என் கைப்பட டின்னை வெட்டித் திறந்து மாதாவின் அற்புதத்தை வியந்து பாராட்டிக் கொண்டு நன்றித் தீபம் ஏற்றி வைத்தேன்.

- *கு. வேதமாணிக்கம்,*
உடன்குடி.

(9) தொற்று நோய் தொடவில்லை

எனக்குத் திருமணமானபின் தென்காசி தாலுகாவிலுள்ள சுரண்டை என்ற கிராமத்தில் நான் கிராமசேவிகாவாகப் பணியாற்றி வந்தேன். அங்கு நான் தங்கி இருந்த இடத்தில் 5 வீடுகள் இருந்தன. அங்கு வாழ்ந்து வந்த மக்கள் வைசூரி, காலரா என்ற கொடிய நோய்களினால் மிகவே வருந்திக் கொண்டிருந் தனர். அலுவல் காரணமாக என் கணவர் பாளையிலேயே தங்க வேண்டியதாயிற்று. நான் தனியே இருந்ததால் அச்ச நடுக்கத்துடன் மாதாவை தினமும் வேண்டிக் கொண்டு வந்தேன். ஒரு நாள் காலையில் பக்கத்து வீட்டிலுள்ள பேச்சிஅம்மா என்ற பெண் (சுமார் 50 வயது) என்னிடம் ஓடோடி வந்து முந்திய இரவில் கண்ட காட்சியை கீழ் வருமாறு கூறினார். "நேற்றிரவு உன் வீட்டு வாசலில் வெண்துகில் அணிந்த ஓர் அழகிய பெண்மணி உட்கார்ந்திருக்கக் கண்டேன். அம்மா நீங்கள் யார்? இந்த இரவு வேளையில் ஏன் இங்கு வந்திருக்கிறீர்கள்? என்றேன்.

ஒருவேளை இந்து ஐதீகப்படி அம்மன்தான் வந்தாளோ என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன். ஆனால், அந்தப் பெண்மணி வாய்திறந்து நான் என் மகளைக் காப்பாற்ற வந்திருக்கிறேன் என்று இருமுறை அழுத்தமாகக் கூறியதைக் கேட்டதும் என் மெய் சிலிர்த்தது. என் வீட்டை நோக்கி திரும்பிவிட்டு மீண்டும் உன் வீட்டு வாயிலைப் பார்த்தேன். அந்த பெண்மணியைக் காணவில்லை. அம்மா உங்கள் மாதாதான் அப்பெண் என்று நான் உறுதியாகச் சொல்வேன்" என்றார்கள். ஏனைய நான்கு வீடுகளில் வைசூரியும், காலராவும் நடமாடின. ஆனால் அவை என் வீட்டை மட்டும் அண்டவில்லை. இதற்குக் காரணம் மணல் மாதாவின் பேரருளேதான். அந்த மாதாவை நான் எவ்விதம் மறக்கக்கூடும்?

- A. *மரிய செல்வம், கிராமசேவிகா,*
பாளையங்கோட்டை

(10) கண்நோய் மறைந்தது

1967–ஆம் ஆண்டு மே மாதத்தில் குடும்பத்துடன் மணல் மாதா கோவில் சென்றேன். அப்போது என் பையன் பிறந்து 40 நாட்களே ஆகியிருந்தன. பையனின் கண்களில் பிறந்த நாள் முதல் பீழை பொங்கிவந்து கொண்டே இருந்தது. எவ்வித சிகிச்சையும் பயனளிக்கவில்லை மாதாவின் ஆலயத்துள் நுழைந்தபோது "இனிமேல் கண்ணில் பீழை வராது நான் வேறு மருந்து பார்க்கப் போவதுமில்லை" என்று கூறி, மாதா கோவில் திருவிளக்கிலுள்ள எண்ணெயை என் மனைவி பையனின் இரு கண்ணிலும் பூசினாள். மறுநாள் கவனித்தபோது அப்பீழை அற்புதமாக மறைந்துவிட்டதை அறிந்து மாதாவை வாழ்த்தினோம்.

- D. *ஜோசப் ஆசிரியர்,*
பாளையங்கோட்டை.

(11) குழந்தை குணமடைந்தது

என் மகள் பல மாதங்களாக நோய்வாய்ப் பட்டு நாளுக்கு நாள் மெலிந்து காணப்பட்டாள். கேரளத்திலுள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, அரசினர் மருத்துவ நிலையம் முதலிய பல இடங்களில் மருந்து கொடுத்தும் குணமாகவில்லை. குழந்தை இனி பிழைக்காது வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள் என்று டாக்டர் கூறிவிட்டார். அநேகர் கணக்கன்குடியிருப்பு மணல் மாதா கோவிலில் தங்கியிருந்து சுகம் பெற்றுச் செல்வதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

எனவே குழந்தையை மாதா கோவிலுக்குக் கொண்டுபோய்க் காணிக்கை செலுத்துவதாக நேர்ந்து கொண்டேன். மாதா கோவிலுக்குக் குழந்தையைக் கொண்டு வந்தோம். அவ்வாறே அங்கு வந்த சில நாட்களுக்குள் மாதாவின் அருளால் குழந்தை நற்சுகமடைந்தது. இப்பொழுது குழந்தை சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறது. மாதாவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

- தேவதாசன், நெய்யாற்றங்கரை,
கேரளம்.

(12) தீராத வயிற்றுவலி தீர்ந்தது

வெகுநாட்களாக நான் வயிற்றுவலியால் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்தேன். பலவிதமான மருந்துகளைச் சாப்பிட்டும் பயனில்லை. இவ்வாறு நான் துன்பப்படுவதை அறிந்த எனது தந்தை ஒரு நாள் என்னையும் என் மனைவியையும் கூப்பிட்டு மாதாவின் புதுமைகளை எங்களுக்கு எடுத்து ஓதி, ஜெபமாலை செய்து மாசற்ற மாமரிக்கு ஒப்புக்கொடுங்கள், வயிற்றுவலி தீர்ந்து போகும் என்றும், நீங்கள் கேட்ட வரம் கிடைக்கும் என்றும், மணல்மாதா கோவிலுக்கு 7 வாரங்கள் திருயாத்திரையாகச் செல்லுங்கள் என்றும் கூறினார்கள்.

நானும், எனது மனைவியும் மணல்மாதா ஆலயத்திற்கு 7 வாரம் திருயாத்திரையாகச் சென்றோம் செல்லும் வழியில் ஐம்பத்துமூன்றுமணி ஜெபமாலை செய்து மாதாவின் மகிமைக்காக ஒப்புக்கொடுத்தோம். மேலும் 7–வது வாரத்தில் மூன்று நபர்களுக்குப் புண்ணியம் செய்தோம். தீராதிருந்த வயிற்றுவலி அற்புதமாக என்னைவிட்டு அகன்றது. மேலும் நாங்கள் கேட்ட வரங்களையும் மாதா அபரிமிதமாய் எங்களுக்குத் தந்துகொண்டிருக்கின்றார்கள். மணல்மாதாவுக்கு எங்கள் மனங்கனிந்த நன்றியை சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

- M. *ராஜேந்திரன்,*
சொக்கன்குடியிருப்பு.

(13) நிரந்தர வேலை கிடைத்தது

நான் பல ஆண்டுகளாக தொடக்க நிலை ஆசிரியராகப் பணியாற்றி வந்தேன். சித்திரங்கள் தீட்டுவதில் எனக்குப் பேரார்வம் உண்டு. எனவே

முறையாக ஓவியக் கலையைப் பயின்று தேர்வு எழுதி மிக எளிதாகத் தேறிவிட்டேன். உயர்நிலைப்பள்ளியில் சித்திர ஆசிரியராகப் பணியாற்றும் தகுதிச் சான்றிதழ் பெற்று விட்டதால் முன்னர் செய்து வந்த வேலையை விட்டு விட்டு சித்திர ஆசிரியர் வேலை தேடினேன். விடுப்பில் ஒரு மாதம் மட்டும் எனக்கு வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் ஆறுமாதகாலமாக வேலையேதுமின்றி வீட்டிலேயே சும்மா இருக்க நேர்ந்தது. இருந்த வேலையையும் விட்டு விட்டு நான் வீணாக நேரத்தைப் போக்கியதால் என் உற்றார் உறவினர் அனைவரும் மிகவும் வருந்தி முறையிட்டனர்.

இத்தருணத்தில்(1967 ஆகஸ்டு) மணல் மாதா கோவிலில் தளக்கல் பதிக்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. என் திறமையை நன்கு அறிந்த எங்கள் பங்குக் குரு என்னை மாதா கோவிலுக்கு அழைத்து பெயிண்டிங் செய்யவும், போர்டு எழுதவும் பணித்தார்கள். நானும் மாதாவின் மகிமைக்காக இவ்வேலையை நல்ல மனத்துடன் செய்தால் எப்படியாவது மாதா துணையால் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சம்மதித்தேன். வேலைகளை முடித்ததும் சுவாமியவர்கள் உனக்கு வைத்துக்கொள் என்று பணத்தை நீட்டினார்கள். நானோ, சுவாமி, மாதாவின் அருளால் எனக்கு வேலை கிடைத்தால் போதும். நான் செய்த வேலைகள் மாதாவுக்கு என் எளிய காணிக்கை என்றேன். நிச்சயமாக மாதா உனக்கு உதவி செய்வார்கள் என்று சுவாமியவர்கள் சொன்னார்கள். அன்று வீட்டிற்கு வந்ததும் எங்கள் ஊரை அடுத்துள்ள படுக்கப்பத்து உயர்நிலைப் பள்ளியில் நிரந்தர வேலை பார்க்க எனக்கு உத்தரவு வந்திருந்தது. உடனே சுவாமிக்குச் செய்தி அனுப்பினேன். மணல் மாதாவின் அற்புதச் செயலை என்னென்பது. மாதாவுக்கு என் மனம் நிறைந்த நன்றி.

- R. *மரியதாசன், சித்திர ஆசிரியர்,*
சொக்கன்குடியிருப்பு

(14) வயிற்று நோய் நீங்கியது

1947-ல் எங்கள் அருமைத் தந்தை திரு. மிக்கேல் நாடார் இலங்கையில் தொழில் செய்து வந்தார்கள். திடீரென வயிற்று நோயால் கஷ்டப்பட நேர்ந்தது. அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றும் குணமடையாது ஊர் திரும்பினார்கள். இங்கே நாட்டு வைத்தியர்களிடம் மருந்து சாப்பிட்டும் சுகம்

கிடைக்கவில்லை. ஒருநாள் இரவில், கனவில் ஒரு பெண் வந்து விளக்கு அணைந்துள்ளது திரியைத் தூண்டிவை என்று கூறி ஒரு சாவியைக் கையில் கொடுத்துவிட்டுப் போனார்களாம்.

விடிந்தவுடன் பக்கத்து வீட்டுப்பாட்டியிடம் கனவைக் கூறினார்கள். அந்தப்பாட்டி மணல் மாதா கோவிலுக்குப் போய் வாடா விளக்கு வைத்துக் கொண்டிருந்தால் வியாதி குணமடையும் என்று, அதற்கு விளக்கம் கொடுத்தார்கள். அவ்வாறே அப்பா குடும்பத்துடன் அங்கு சென்றார்கள். கனவில் வந்த பெண் சொன்னமாதிரியே மாதா கோவிலில் விளக்கு அணைந்து கிடந்தது. எங்கள் அப்பா அதை ஏற்றிவைத்து, மாதாவை நம்பி நான் எக்கதி அடைந்தாலும் உம்மைவிட்டுப் போக மாட்டேன் என்று கூறி கோவிலை அடுத்து குடிசையொன்றை அமைத்து அதிலே தங்கினார்கள். சில தினங்களுக்குள் மாதாவின் அற்புதச் செயலால் எங்கள் அப்பா பூரண சுகமடைந்தார்கள். பெற்றுக் கொண்ட உதவிக்கு நன்றியாக 40 நாள்வரை அங்கே தங்கியிருந்து விட்டு மகிழ்வுடன் வீடு திரும்பினார்கள்.

- **P.M.** *சொர்ணம்,*
சொக்கன்குடியிருப்பு.

(15) டாக்டர்கள் கை விட்டனர், ஆனால் மாதா கைவிடவில்லை

எனக்கு சுமார் 6 வயது நடக்கையில் நான் வெகு நாளாக சுகமில்லாமலிருந்தேன். பல மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. டாக்டர்களும் கைவிட்டு விட்டார்கள். இறுதியாக எனது தந்தை கண்ணையா நாடாரவர்கள் என்னை மணல் மாதா கோவிலில் கொண்டு வைத்து எனக்கு நற்சுகம் கிடைத்துவிட்டால் எனது பெயரை சிலுவை பிச்சை என்று வைப்பதாக நேர்ந்திருக்கிறார்கள். மாதாவின் அருளால் எனக்கு நற்சுகம் கிடைத்தது. ஆகவே எனது பெயரை சிலுவைப் பிச்சையென்று மாற்றி வைத்திருக்கிறார்கள். எனக்கு சுகம் தந்த மாதாவுக்கு நன்றி.

- க. அருணாசலம் என்ற சிலுவைப்பிச்சை,
உசரத்துக்குடியிருப்பு.